
# செய்தியாளர் ஊடக தூதுமடல்

ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம்

இது ஒரு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் வெளியீடு - ஸ்தாபிதம் யூன் 2023

தூது 01 - மடல் 01 - யூன் 2023 - தனிப்பட்ட வினியோகத்திற்கு மட்டும்



**57ஆவது உலக சமூகத் தொடர்பு நாள் - 21 மே 2023**

மூத்த ஊடகவியலாளர்

சண்முகராஜா யோகரட்ணம் ராதேயன் அவர்களுக்கு

இவ்விதழ் அர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வளத்துடன்

## வாழும் போதே வாழ்த்துவோம்



**வாழ்க வளத்துடன் - வாழும் போதே வாழ்த்துவோம் ஏப்பிறல் - யூன் 2023 ஊடகதூது மடலின் விருது பெறும் ஊடக பிரமுகர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை நிரந்தர விரிவுரையாளர் - துறையின் தலைவர் - பேராசிரியர் - கலைப்பீடாதிபதி எனப் பதவிப்படிகளில் ஏறிச்செல்லும் பேராசிரியர் சி.ரகுராம் அவர்களை வாழ்த்தி ஊடக தூது மடல் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கிறது.**

பேராசிரியர் ரகுராம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் ஈழநாதம் - நமது ஈழநாடு - யாழ் தினக்குரல் போன்ற நாளிதழின் ஆசிரியராகவும் கிழக்கிலிருந்து வெளிவந்த தினக்கதிர் நாளிதழின் செய்தி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

மகாராஜா தொலைக்காட்சிச் சேவையில் நிறைவேற்றுத் தயாரிப்பாளராக பணியாற்றிய இவர் தமிழகத்தின் விஜய் தொலைக்காட்சியில் தயாரிப்பாளராகவும் கடமையாற்றியவர்

என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை விரிவுரையாளராக இணைந்து பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை சிரேஸ்ர விரிவுரையாளரானார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகத் துறையின் முதலாவது நிரந்தர விரிவுரையாளர் என்பதோடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறையின் முதலாவது பேராசிரியருமாவார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் தொடர்பாடல் மற்றும் வணிக கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகவும் வளாகத்தின் பதில் முதல்வராகவும் இவர் கடமையாற்றியிருக்கிறார்.

கொமன்வெல்த் புலமைப்பரிசிலுடன் அபிவிருத்தித் தொடர்பாடல் துறையில் இந்தியா காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தை பெற்ற இவர் தனது முதுகலைமாணிப் பட்டப்படிப்பை இதழியியல் மற்றும் வெகுசனத் தொடர்பாடலில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் காட்சித் தொடர்பாடலில் இளவிஞ்ஞானமாணிப் பட்டத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் லொயோலா கல்லூரியிலும் பெற்றவர்.

தனது இளவிஞ்ஞானமாணி கற்கையின் போது பல்கலைக்கழகத்தின் முதன்நிலை மாணவராகத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டமை இங்கு சிறப்ப முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியது.

தொடருங்கள் தங்கள் பயணத்தை - சாதிக்க நிறையவே உண்டு என்ற நம்பிக்கையோடு - வாழ்க வளத்துடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதை முதலில வாசிக்கிறது எண்டு பாப்பம்...

(01) யூன் 2023 ஊடகதூது மடலின் விருது பெறும் ஊடக பிரமுகர் பேராசிரியர் சி.ரகுராம்

(02) செய்தியாளர் ஊடக தூது மடல் - தூது 01 மடல் 01 - ஸ்தாபிதம் யூன் 2023

(03) இது உங்கள் சொத்து - இது உங்கள் சொத்து

(04) தூது விடும் எண்ணங்கள் 01 ஏப்பரல் - யூன் 2023

(05) ஊடகத்துறை தொழில்வாண்மை பெற இன்னொமொரு முக்கிய வரலாற்று முயற்சி...! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம்

(06) பன்னிரண்டு வயதில் பயணிக்க தொடங்கிய பேனா இன்றும் - தமிழர் தேசத்தின் இருப்பிற்காய் பயணிக்கிறது - ஊடகவியலாளர் துவாரகா கலைக்கண்ணன்

(07) 57ஆவது உலக சமூகத் தொடர்பு நாள் - 21 மே 2023 - திருத்தந்தை பிரான்சீஸ்

(08) தமிழ் செய்தியாளர்கள் தமக்கிடையே ஒரு புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும் - யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை

(09) ஊடகவியலாளர்களுக்குத் தேவையான தகவல் களை வழங்க செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் முன்வர வேண்டும் - வடமராட்சி புலோலி மூத்த ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன்

(10) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பாதுகாப்போம் - இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஏற்பாட்டில் வவுனியாவில் பயிற்சி - தகவல் தரும் செய்தியாளர் : ஜெயம் ஜெகன்

(11) இலங்கையில் யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் - ஊடக சுதந்திரத்தில் முன்னேற்றமா ???

(12) மூத்த ஊடகவியலாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் நூல் வெளியீடு

(13) விருப்பங்கள் விமர்சனங்கள் அல்ல என்பதை உணர்த்தியுள்ள மாணிக்கவாசகத்தின் நூல் - ஊடகவியலாளர் அ. நிக்ஸன்

(14) பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரறின் அடுத்த நகர்வு

(15) ஊடகத் தொழிலைச் செய்யப் புறப்பட்டவன் தேடித் தேடிக் கற்கவேண்டும் - புதிய தொழில் நுட்பங்களை உடனடியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும் -

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் - தராகி தமிழ் ஊடகவியலாளர்களுக்குச் சொல்லித் தந்த பாடம்

(16) மறைந்த மூத்த ஊடகவியலாளர் கானமயில்நாதன் அவர்கள் உலகில் மறைந்தாலும் தனது எழுத்துக்களால் வாழ்ந்து கொண்டிருப்பார் - செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் - தகவல் தரும் செய்தியாளர் : ஜெயம் ஜெகன்

(17) கத்தோலிக்க சமய வெளியீடுகளைத் தாண்டி வெளிப்பத்திரிகைகளுக்குப் எழுத தூண்டியவர் கானமயில்நாதன் அவர்கள்

(18) ஊடகத்துறையில் பெண்களின் சாதனைகளும் சவால்களும்

(19) அமரர் அன்ரன் சின்னராசா பிலிப் என்ற இந்த சின்ன இராசாவை அறிந்தவர்க்கும் அறியாத வர்க்கும் இது ஒரு தேவையான பதிவு

(20) கனடா ஒன்ராறியோ அரசின் ஜூன் கோல்வூட் ஞாபகார்த்த முதன்மைச் சாதனையாளர் விருது பெற்ற முதல் ஆசிய பிரதேசத்தவர் முதல் தமிழர் சின்னத்துரை திருச்செல்வம்

(21) 1984ஆம் ஆண்டு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகையாளன்

(22) கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்

(23) ஊடகவியல் கற்போம் - பொறுப்புடன் கடமை யாற்றுவோம்

(24) ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து பணி யாற்ற இது போன்ற இதழ்கள் துணைபுரிய முடியுமென நம்புகிறேன் சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - நல்லை ஆதீனம்

(25) ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்க வாசகம் மறைந்தாலும் மறவோம் - அமைதியில் இளைப்பாறுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தியாளர் - ஊடக தூது மடல்

தூது 01 - மடல் 01 - ஏப்பிரல் யூன் 2023    ஸ்தாபிதம் யூன் 2023

**ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம்**

**இது ஒரு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் - பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் வெளியீடு** - தனிப்பட்ட வினியோகத்திற்கு மட்டும்

*செய்தியாளர் - ஊடக தூது மடல் பாடசாலை ஊடகவியல் மாணவர்கள் - பல்கலைக்கழக ஊடக மாணவர்கள் மற்றும் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் - ஊடக நிறுவனங்கள் நலன் கருதி வெளியாகும்*

**ஆசிரியர் குழுவினர்** *பிரதம ஆசிரியர்*

*கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்*

PhD., Journalism, M.Phil Journalism and Mass Communication, M.A Journalism and Mass Communication, P.G Dip in Journalism and Mass Communication., Madurai Kamaraj University, India, Certificate in Journalism, Open University of Sri Lanka, B.A. Peradeniya, B.Th.,Rome.

*(02) துணை ஆசிரியர் : மரியதாஸ் நியூட்டன்*

Dip in Journalism

*இணைப்பாளர் : பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் - பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் றிசேச் சென்ரர் - ஊடகவியலாளர்*

***மற்றைய ஆசிரியர்கள்***

*(03) யோ.சி.கோணேசலிங்கம்*

Med., Bed., University of Jaffna, Dip in Journalism Media Resources and Traning Centre University of Jaffna, Media Teacher Mahajana College Tellipalai Jaffna, Media Lecturer Dan TV,Free lance Journalist

*(04) பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்*

B.A., (Hons) N.Dip in Tech.,M.Ed.PGDE, Dip in Journalism., M.A., (Communication) Lecturer Jaffna National College of Education, Kopay

*(05) கஜிதரன் நித்தியானந்தன்*

MA., Journalism and Mass Communication, Bharathiar University Coimbatore India,
BA., Special in Media Studies, University of Jaffna,
Media Teacher J/ Union College Thellipalai.

*(06) எஸ். அனுராஜ்*

BA., Special in Media Studies, University of Jaffna,
Media Teacher Puthukkulam Maha Vidyalyam

*(07) ச.கிருபாகரன்*

BA., Special in Media Studies, University of Jaffna, Media Teacher

*(08) கே.வி.நவநீதன் (நவா)*

BA., Special in Media Studies, University of Jaffna,

*(09) டினேஸ் கொடுதோர்*

M.A.in Media Studies, Sri Palee Campus, University of Colombo, M.A. in Journalism and Mass Communication, Bharathiar University, India, B.A.(Hons) in Media Studies, University of Jaffna. Media Lecturer University of Jaffna.

*(10) அ. அனித் டிறொக்சன்*

M.A., Cultural Studies, University of Jaffna, BSc. Visual Communication, Bharathiar University, Coimbatore, India. Dip in Journalism, Media Resources and Training Centre, University of Jaffna.

*(11) சுந்தரம் .ராஜேஸ்கரன்*

BSc. Visual Communication, Bharathiar University, Coimbatore, India.

*(12) வெற்றிவேல் துசியந்தன்*

BSc. Visual Communication, Bharathiar University, Coimbatore, India.

*(13) ஜெயம் ஜெகன்*

BSc. Visual Communication, Bharathiar University, Coimbatore, India.
Dip in Journalism, Media Resources and Training Centre, University of Jaffna. Dip in Counselling, National University of Ireland.

*(14) விவேகானந்தன் விபுலானந்த்*

BSc. Visual Communication, Bharathiar University, Coimbatore, India, Bachelor of Management Studies,Open University of Sri Lanka, Higher Diploma in Lirary Science, Dip in Journalism, Media Resources and Training Centre, University of Jaffna, Dip in Counselling, National University of Ireland.

*(15) புளோறன்ஸ் சூசைதாஸ்*

*ஆசிரியர் - இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்*
*ஊடகவியலாளர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16) அன்ரனி யேசுறடணம் சிறி
BA., Special in Media Studies, University of Jaffna.

(17) இ.டெலான் டெஸ்
மலர் திட்டமிடல் - வடிவமைப்பு - ஆசிரியர் குழு உறுப்பினர்

இவர்களோடு
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் - பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் றிசேச் சென்ரர் நிலையத்திலிருந்து இணைபவர்கள்
இ.இரஞ்சித் குமார் : உதவி இயக்குனர்
பெஞ்சமீன் லெனின் : மேற்பார்வையாளர்

**ஆலோசனை குழு உறுப்பினர்கள்**

(01) பேராசிரியர் சி.ரகுராம்
PhD Gandhigram Rural University, India, Master of Journalism and Mass Communication, Madurai Kamaraj University, India, B.Sc. Visual Communication, University of Madras, India
கலைப்பீடாதிபதி மற்றும் முன்னாள் ஊடகக் கற்கைகள் துறைத்தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(02) வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்
முன்னாள் ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(03) கிருத்திகா தர்மராஜா
முன்னாள் ஊடக விரிவுரையாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்ழகம் - பால்நிலை ஆலோசகர்.

(04) ந.விஜயசுந்தரம்
Dip in Journalism, Media Resources and Training Centre, University of Jaffna, M.A., Cultural Studies, University of Jaffna.
முன்னாள் ஊடக விரிவுரையாளர் - ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் - யாழ்பாணப் பல்கலைக்கழகம் - பிரதம ஆசிரியர் வலம்புரிப் பத்திரிகை.

(05) எம்.எஸ்.தேவகௌரி
விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

(06) பூங்குழலி சிறிசங்கீர்தனன்
Senior Lecturer in Media Studies, Faculty of Arts, University of Jaffna, Sri Lanka Head, Department of Media StudiesB.A. (Hons) in Communication Studies (Trincomalee Campus, Eastern University, Sri Lanka) Master's in Mass Media Studies (Sri Palee Campus, University of Colombo)

(07) இரத்தினம் தயாபரன்
Dip in Journalism, Media Resources and Training Centre, University of Jaffna.

**இணைப்பாளர்கள்**

(01) பாடசாலைகளின் ஊடக மாணவர்களின் இணைப்பாளர் :
(01) கஜிதரன் நித்தியானந்தன் : ஆசிரியர் குழு உறுப்பினர்.
(02) எஸ். அனுராஜ் - ஆசிரியர் குழு உறுப்பினர்.

(02) பல்கலைக்கழகங்களின் ஊடகமாணவர்களின் இணைப்பாளர் :
(01) டினேஸ் கொடுதோர் - ஆசிரியர் குழு உறுப்பினர்.
(02) எம்.எஸ்.தேவகௌரி ஆலோசனை குழு உறுப்பினர்
(03) ஊடகவியலாளர்களின் இணைப்பாளர்கள் :
(01) இரத்தினம் தயாபரன் ஆலோசனை குழு உறுப்பினர்
(02) மரியதாஸ் நியூட்டன் - துணை ஆசிரியர் - ஆசிரியர் குழு உறுப்பினர்
(04) ஆய்வுக் கட்டுரைகளின் இணைப்பாளர்கள்:
(01) பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் - ஆசிரியர் குழு உறுப்பினர்
(02) விவேகானந்தன் விபுலானந்த் - ஆசிரியர் குழு உறுப்பினர்

பாடசாலை ஊடக மாணவர்கள் - பல்கலைக்கழக ஊடக மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களால் உரிய இணைப்பாளர்களுடன் கலந்தாலோசித்து தலைப்பைப் பெற்று ஆய்வு ரீதியாக உசாத்துணையுடன் எழுதப்பட்டு பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் ஆக்கங்களுக்குத் தகுந்த் சன்மானம் நிட்சயம் வழங்கப்படும்.

இணைப்பாளர் : யாழ்ப்பாணம்
மரியதாஸ் நியூட்டன் : துணை ஆசிரியர் : ஆசிரியர் குழு உறுப்பினர்

இணைப்பார்கள் : கிளிநொச்சி - முல்லைத்தீவு
(01) ஜெயம் ஜெகன் : ஆசிரியர் குழு உறுப்பினர்
(02) இரமண ரகு : BLit., Bharathiar University, Coimbatore, India.

இணைப்பார் : கொழும்பு
ஜே.எம். யோசவ் டபிள்யூ.எஸ்.பெர்னான்டோ
Dip In Journalism, Office Journalist, Sri Lanka Broadcasting Corporation.

இணைப்பாளர் : மன்னார் கொன்சல் வாஸ் கூஞ்சே
ஊடகவியலாளர்

இணைப்பாளர் மட்டக்களப்பு : ஜே.எச்.இரத்தினராஜா
ஊடகவியலாளர் - எழுத்தாளர்.

உங்கள் படைப்பாற்றல் மிக்க அறிவுரைகளும் ஆலோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படும் - செயற்படுத்தப்படும்.

செய்தியாளர் ஊடக தூதுமடல் உண்மையாக யாரையும் சார்ந்தோ அல்லது யாரையும் எதிர்த்தோ வெளிவரும் ஒரு மடல் அல்ல. மாறாக அனைவரையும் இணைத்து ஊடக ஒழுக்க நெறிக்கு அமைந்து வெளிவரும் படைப்பாற்றல் மிக்க ஒரு மடல் ஆகும் எழுதியவற்றிற்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாளர்கள் எழுதியவர்களே.

விடயதானங்கள் காப்புரிமைக்கு உட்பட்டது. இதில் வெளிவரும் விடயங்களை அனுமதியின்றி எவரும் எந்த வகையிலும் பாவிக்க முடியாது.

Too many cooks will spoil the soup என்பார்கள் அதாவது கன எலி கூடினால் புத்தெடுக்காது. இங்கு ஆசிரியர் குழு - ஆலோசனைக்குழு - இணைப்பாளர்கள் எனப்பலர் உள்ளனர். - இவர்கள் கூடி புத்தல்ல புதையலே எடுப்பார்கள் - சற்றுப் பொறுங்கள்.

தொடர்பு மற்றும் வெளியீடு

**ஊடக தூது மடல்**

**பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் - பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா ரீசேச் சென்ரர் 23 - 25 பெரிய தோட்டம் - பீச் றோட் - யாழ்ப்பாணம் - இலங்கை**

# இது உங்கள் சொத்து - திரும்பவும் சொல்லுகிறோம் - இது உங்கள் சொத்து

இந்திய அரச பஸ் வண்டியில் - இது உங்கள் சொத்து - எனப் பொறிக்கப்பட்டிருந்த வாசகத்தை வைத்து அந்த அரச பஸ் வண்டியை விற்க முற்பட்டு நையப் புடைக்கப்பட்ட வடிவேலுவின் நகைச்சுவை போன்றதல்ல இது. உண்மையாக நம்புங்கள். ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம் என்ற விருது வாக்குடன் வெளியாகும் இந்த பத்திரிகையாளர் தூது மடல் - இது உங்கள் சொத்து - எனச் சத்தமாகச் சொல்லிக் கொண்டே யூன் 2023 முதல் வெளிவருகிறது. இதனை மேலும் மெருகூட்ட - பொட்டிட்டு அழகு பார்க்க - பொத்திப் பொத்திப் பாதுகாக்க இதை உங்கள் சொத்தாகவே கருதுங்கள். ஆசிரியர் குழு - ஆலோசனைக்குழு - இணைப்பாளர் குழு என்ற மூன்று நிலைக் குழுவினரால் இந்தப் பணிகள் ஆற்றப்படும்

**பத்திரிகையாளர் தூது மடலின் பணி என்ன?**

(01) ஊடகப் பணியில் கொல்லப்பட்ட மற்றும் மறைந்து போன ஊடகவியலாளர் வாழ்வையும் பணியையும் பதிவு செய்து ஆவணமாக்கும்.

(02) ஊடகப் பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற ஊடகவியலாளர்களின் விபரங்களைப் பதிவு செய்து வட இலங்கை செய்தியாளர் பணி விபரக் கையேடு ஒன்றை முதலில் வெளியிடும்.

(03) தமிழ் ஊடகவியல் சார்ந்து பலரால் அறிந்தும் அறியப்படாமலும் இருக்கும் பழைய புதிய அரிய சம்பவங்கள் - அனுபவப்பகிர்வுகள் - தகவல்கள் மற்றும் தரவுகளைப் பத்திரப்படுத்திப் பாதுகாக்கும்.

(04) பிசப் சவுந்தரம் மீடியா சென்றறின் அடுத்த நகர்வாக பிசப் ஜஸ்ரீன் மீடியா லைபிறறி அன்ட் மீடியா ரீசேச் சென்ரர் 23 - 25 பெரிய தோட்டம் - பீச் றோட் - யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடங்கப் பட்டுள்ளது. (பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் எனப் பெயர் பாவிக்கப்பட்டதைப் போன்று பிசப் ஜஸ்ரீன் மீடியா லைபிறறி அன்ட் மீடியா ரீசேச் சென்ரர் என ஆங்கிலத்திலேயே பெயர் பாவிக்கப்படும்)

(05) இலங்கையில் வெளிவந்த ஊடகம் சார்ந்த அனைத்துத் தமிழ் நூல்களும் படிப்பதற்குப் இங்கு பாதுகாக்கப்படும்.

(06) ஊடக நூல்களை எழுதியவர்களிடம் நூல்கள் பணம் கொடுத்து வாங்கப்படும்.

(07) ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட நூல்கள் அவை நேரடியாக ஊடகத்துடன் தொடர்பு கொண்டி ராவிடினும் அவை ஊடகவியலாளரின் நூல்கள் என்ற வகையில் இங்கு பாதுகாக்கப்படும்.

(08) ஊடகவியல் சார்ந்த ஆக்கங்கள் ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றை எழுதி ஆவணப்படுத்த வழி சமைக்கும்.

(09) இலங்கையில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் - இலங்கையில் வெளியான தமிழ் ஊடக நூல்களின் பட்டியல் - இலங்கை பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஊடகக் கல்வி - யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையம் - கிளிநொச்சி அறிவியல் நகர் ஊடக அறிவியல் கல்லூரி - கொழும்பு ஊடகவியற் கல்லூரி - ஊடக பயிற்சி வழங்கிய நிறுவனங்கள் அவற்றால் நடத்தப்பட்ட ஊடகவியற் பயிற்சிகள் - ஊடகவியல் கற்பிக்கும் அரச மற்றும் தனியார்துறை ஆசிரியர்கள் - ஊடகப் பணியில் பெண்கள் பங்களிப்பு போன்ற ஊடகவியல்சார் விடயங்கள் பற்றிய முழுமையான சரித்திரப் பதிவுகளை மேற்கொள்ளும்.

(10) மேற்குறிப்பிட்ட வியடங்கள் தொடர்பாக ஆதாரபூர்வமாக அடிக்குறிப்புக்களுடன் ஆய்வு ரீதியில் எழுதப்படும் விடயதானங்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கி செய்தியாளர் ஊடக தூது மடலில் பிரசுரிக்கும். பின்னர் இவை தனியான நூலுருவாக்கமும் பெறும்.

(11) பாடசாலை - பல்கலைகழக ஊடக மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் விருது வழங்கும் நிகழ்வு நடத்தப்படலாம். யாழ்ப்பாண பல்கலைகழக ஊடக மாணவர்களுக்கு பல்கலைக்கழக தங்கப்பதக்க விருது வழங்கப்படலாம்.

(12) சிறப்புப் பேருரைகள் - ஊடக வழிகாட்டற் பயிற்சிகள் - ஊடக சந்திப்புகள் நடத்தப்படலாம்

(13) மேலும் பல பணிகள் இங்கு இணைக்கப்படும். இப்பணிகளை மேலும் மேம்படுத்தத் தரப்படும் அறிவுரைகளும் ஆலோசனைகளும் ஏற்கப்படும். இப்பணிகளை சிறப்பாக ஆற்ற பொது நலன் கருதித் தகவல்களையும் தரவுகளையும் எம்முடன் பகிருங்கள்.

தனியாகவோ அல்லது குழுவாகவோ பணியில் எம்முடன் இணையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தியாளர் ஊடக தூதுமடல்

ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம்

## தூது விடும் எண்ணங்கள் - 01 ஏப்ரல் - யூன் 2023

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் – பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் 23 – 25 பெரிய தோட்டம் பீச் றோட் யாழ்ப்பாணம் இலங்கை என்ற புதிய முகவரியில் இயங்கும் மேற்படி நிறுவனத்தின் செயற்பாட்டில் தமிழ் ஊடகவியலை இன்னும் மேம்படுத்தி வழிகாட்டி நெறிப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட முயற்சிகளில் செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் வெளியீடும் ஒன்றாகும்.

செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் ஊடக தூது விடுவோம் – ஊடக உறவுகளை இணைப்போம் என்ற விருது வாக்குடன் இயங்கும்.

இங்கு தூது என்பது ஆண்டுகளின் எண்ணிக்கையையும் மடல் என்பது தொடர்ந்து வரும் இதழ்களின் எண்ணிக்கையும் குறிக்கும். தூது விடும் எண்ணங்கள் என்பது இதழின் ஆசிரியர் தலையங்க எண்ணக்கருவாக அமைந்திருக்கும்.

செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடலின் சின்னமானது செய்தியாளர்களின் பாரம்பரிய செய்திக் கருவியான பேனாவை நடுவில்த் தாங்கி நிற்கிறது.

சமாதானப் பறவைகளான வெண் புறாக்கள் சமாதானத்தைக் குறிக்கும் ஒலிவ மரக் கிளையினை வாயினில் கவ்வி ஊடகத் தூது விட ஆயத்தமாக உள்ளன.

இவை ஆங்கிலத்தில் செய்தியைக் குறிக்கின்ற நியூஸ் என்ற ஆங்கில வார்த்தையின் என் என்ற வடக்கு – ஈ என்ற கிழக்கு – டபிள்யு என்ற மேற்கு – எஸ் என்ற தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் நோக்கிச் சிறகடித்துப் பறந்து ஊடகத் தூது விட நான்கு திசை நோக்கியும் காத்திருக்கின்றன.

1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் ஒரே பத்திரிகையான ஈழநாடு பத்திரிகையின் வெள்ளி விழாக் காலத்தில் வட இலங்கை பத்திரிகையாளஉ சங்கத் தலைவராக தற்போதைய டான் தொலைக்காட்சி தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் பணியாற்றிய காலத்தில் பத்திரிகையாளன் என்ற இது போன்ற ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

அவ்விதழ் பற்றிய மேலதீக தகவல்கள். தொடர்ந்து இவ்விதழில் தரப்படும்.

செய்தியாளர்கள் துல்லியம் நடுநிலமை பக்கம் சாராமை என்ற ஊடகக் கோட்பாடுகளுடன் அறிவித்தல் – அறிவுறுத்தல் – விளக்குதல் – மகிழ்வூட்டல் – வியாபாரம் செய்தல் என்ற ஊடகப் பணிகளின் செயற்பாட்டாளர்களாகப் பணியாற்ற வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்த எல்லாப் பணிகளையும் இணைத்து ஒரு கருத்துருவாக்கப் பணியை மேற்கொள்ள வேண்டும்.

கருத்துருவாக்கம் என்பதே இங்கு முதன்மையானதும் முக்கியமானதுமாகும். உலகிலே மனித உயிருக்குப் பெறுமதியான எந்தச் செய்தியும் இருக்க முடியாது. காயம் அடைவதற்குப் பெறுமதியான எந்தக் காட்சிப் பதிவும் இருக்க முடியாது என்பது ஊடகவியலின் பொன்னான விதியாகும்.

இலங்கையில் தமிழ் செய்தியாளர்கள் பலர் கடந்த காலங்களில் செய்தியாகவே போயுள்ளனர் என்பது கடந்த 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரில் இரத்தத்தால் எழுதப்பட்ட காவியம்.

செய்தியாகிப் போன இந்த செய்தியாளர்கள் பற்றியும் செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் நிட்சயம் பேசும். அவர்கள் வாழ்வையும் ஊடகப் பணியையும் பதிவு செய்து ஆவணப்படுத்தும்.

இனியும் செய்தியாளர் செய்தியாகப் போகக் கூடாது என அறிவுறுத்தும். செய்தியாக வேண்டாம் என வலியுறுத்தும். அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிவிக்க முயற்சிக்கும்.

செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் மற்றப் பத்திரிகைகள் போன்று வளமையான செய்திகளை அறிக்கையிடும் ஒரு செய்திப் பத்திரிகை அல்ல. மாறாக செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் செய்திகளை அறிக்கையிடும் செய்தியாளர் பற்றிய செய்திகளை அறிக்கையிடும்.

இது இலங்கையில் தமிழ் பேசும் செய்தியாளர்கள் பற்றிய ஒரு செய்திப் பத்திரிகை. ஏன் அவ்வப்போது தேவை கருதி மற்றவர்கள் பற்றியும் பேசும்.

இது தமிழ்ச் செய்தியாளர்களின் சவால்கள் – சாதனைகள் – சரித்திரங்கள் – அறிவுத் தகைமைகள் – அனுபவங்கள் பற்றிப் பேசும்.

செய்தியாளரின் இருப்பு – இறப்பு – நினைவுகள் – நிகழ்வுகள் பற்றி அறிக்கையிடும். செய்தியாளர் பற்றிய சம்பவங்களை – செய்திகளை – சுக துக்க அனுபவங்களைப் பதிவு செய்யும். அவர்களின் துறைசார் அறிவை வளர்க்க – வாழ்வுசார் அனுபவத்தை பெருக்க இயன்ற பணி ஆற்றும்.

மனித சமுதாயத்தில் இருந்து கொண்டு தன் சமுகம் பற்றிய செய்திகளை அவை தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் எதிரானதாக இருந்தாலும் பொதுநலன் கருதி அவற்றை அறிக்கையிட்டு விட்டு வெறும் இலக்கத்தில் ஒளிந்து கொள்ளும் மனிதர் பற்றியே இவ்விதழ் பேசப்போகிறது.

காலத்தையும் நேரத்தையும் பொருட்படுத்தாது – ஓய்வு உறக்கம் இன்றி அர்ப்பணத்துடன் அல்லும் பகலும் ஊர் உலகத்திற்காகப் பொது நலன் கருதி பணியாற்றி வரும் இந்த செய்தியாளர் பற்றி செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் முழுமையாகப் பேசும்.

செய்தியாளர் என்ற இந்த முகத்தைக் காட்டிக் கொள்ளாத மனிதர்களின் வாழ்வை – அறிவை – அனுபவத்தை சரித்திரப் பதிவுகளை – சாதனைகளை ஏன் அவர்களின் இன்ப துன்பப் பதிவுகளையும் தோற்றுப்போன முயற்சிகளைப் பற்றிக்கூடப் பேசும்.

செய்தியாளர் ஊடக மடலில் வெளியிடப்படும் விடயங்கள் காலத்தையொட்டியதாக சுடச்சுட வெளியிடப்படாமல் போகலாம். அது இத்தூது மடலின் வெளியீட்டுக் காலத் தன்மைக்கேற்ப தவிர்க்கப்பட முடியாததே எனப் புரிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நிட்சயமாக செய்தியாளர் பற்றிய செய்திகளை - நடக்கின்ற - கிடைக்கின்ற தன்மைக்கேற்ப - சுருக்கமாக சுவையாக - சுவாரசியமாக பதிவு செய்து கொண்டே இருக்கும். அறிக்கையிட்டுக் கொண்டே இருக்கும்.

சில வேளை செய்தியாளர் ஊடக தூது மடல் நம்மை நாமே புகழ்வதாகத் தெரியும். அதாவது செய்தியாளர்களைப் பற்றி செய்தியாளர்களே பகழ்வதாக அமையலாம். நம்மை நாமே புகழ்ந்து பெருமைப்பட்டு அந்த புகழ்ச்சியின் வழி வளராவிட்டால் என்ன பயன்.

இது ஒரு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் வெளியீடு என்கின்ற வகையில் அதன் செயற்பாடுகள் இங்கு இடம் பெறுவது தவிர்க்கப்பட முடியாததே. ஆனால் யாரும் வெளியே இல்லை. எல்லாருக்கும் இங்கு இடம் உண்டு. நம்புங்கள். இதனை வெளியிடுவது யார் என்பது இங்கு முக்கியமல்ல. இதனை வெற்றிகரமாக நகர்த்துவது இலங்கையில் செயதிப்பணி புரியும் அனைத்துச் செய்தியாளர்களின் பொறுப்பான பணி என்பதே முக்கியமானதாகும்.

எல்லாவிதமான கோபதாப எண்ணங்களையும் வெறுப்புணர்வு களையும் மறந்து செய்தியாளர் என்ற எண்ணத்தை மட்டும் மனதிற் கொண்டு இந்தப் பணியை வெற்றியாக்கவும் செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் நீடித்து வீறு நடைபோட்டுப் பவனி வரவும் அனைத்துச் செய்தியாளர்களும் உங்கள் உதவிக்கரங்களை எம்மை நோக்கி அகல நீட்டுங்கள் என அன்போடு வேண்டுகிறோம். - வாழ்க வளத்துடன் என மகிழ்வோடு வாழ்த்துகிறோம்.



# ஊடகத்துறை தொழில்வாண்மை பெற இன்னொமொரு முக்கிய வரலாற்று முயற்சி...!

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி மற்றும் முன்னாள் ஊடகக் கற்கைகள் துறைத்தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் அவர்களின் செய்தி இது**

செய்தியாளர் என்னும் மகுடந் தாங்கி வெளிவரவிருக் கும் ஓர் தனித்துவமும் புதுமையும் மிக்க படைப்பாக்க முயற்சிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை சார்ந்து எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

செய்திகளைத் தருவதாகவே செய்திமடல்கள் இருக்கும்போது அச்செய்திகளின் ஆக்ககர்த்தாவாக முன்வைப்பாளாராக அமையும் செய்தியாளர்களைப் பற்றிய செய்திமடல் என்பது ஊடகத்துறைசார்ந்து ஓர் புத்தாக்கம் என்றே கூறலாம்.

மிகுந்த சவால்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மக்களுக்கான தகவல் அறிவிப்புப் பணியில் சோர்வின்றிப் பணியாற்றும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் மிக்க தமிழ் ஊடகவியலாளர்களைக் கௌரவிப்பதாக அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க கடமைப் பொறுப்புக்களுக்கான ஆவணமாக இந்த செய்திமடல் திகழ முடியும்.

ஊடகப்பணி என்பது அதன் தொழில்வாண்மை பேணப்படும்போதே அது இன்னமும் பிரகாசிக்க முடியும் என்பதுடன் ஊடகத்துறை மீதான மக்கள் நம்பிக்கையையும் அதிகரிக்கும். இந்தவகையில் வடபுலத்தில் தொழில்வாண்மைமிக்க ஊடகத் துறையைக் கட்டியமைக்கும் இன்னுமொரு கால முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடாக 'செய்தியாளர்' செய்தியாளர்களின் குரலாக ஒலிக்கும் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது.

'செய்தியாளர்' வெளியீட்டு முயற்சிக்கு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கு எமது வாழ்த்துக்கள்.

பேராசிரியர் சி.ரகுராம் கலைப்பீடாதிபதி மற்றும் முன்னாள் ஊடகக் கற்கைகள் துறைத்தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து பணியாற்ற இது போன்ற இதழ்கள் துணைபுரிய முடியுமென நம்புகிறேன் சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - இரண்டாவது குரு மகா சந்நிதானம் - நல்லை ஆதீனம்

தமிழ் ஊடகத்துறையில் பன்முக பங்களிப்புக்களைச் செய்து தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கும் யாழ்ப்பாணக் குருவான ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் முயற்சியில் செய்தியாளர் என்ற சஞ்சிகை ஒன்று வெளிவர இருப்பது பற்றி அறிந்து மனம் மகிழ்கிறேன்.

இன்று அனைத்துத் துறைகளையும் உள்வாங்கி அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது ஊடகத்துறையாகும். ஆதனை இயக்கும் கருவிகளாக இருக்கும் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து பணியாற்ற அவர்களுக்கிடையில் அன்புப் பாலத்தை அமைக்க இது போன்ற இதழ்கள் துணைபுரிய முடியுமென நம்புகிறேன்.

பல ஊடக நூல்களை எழுதியும் பல்கலைக் கழகங்களில் ஊடகக் கல்வியை போதித்தும் பயிற்சிப் வகுப்புக்களை நடத்தியும் சிறப்பான ஊடகப் பணியாற்றி வரும் இவரின் இந்த ஊடக தூதுமடல்ப் பணியும் சிறக்க வேண்டுமென மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டு வயதில் பயணிக்க தொடங்கிய பேனா இன்றும் தமிழர் தேசத்தின் இருப்பிற்காய் பயணிக்கிறது

**மூத்த ஊடகவியலாளர் சண்முகராஜா யோகரட்ணம் ராதேயன் அவர்களின் அரை நூற்றாண்டு கால ஊடகப் பணிப்பயணம் பற்றி ஊடகவியலாளர் துவாரகா கலைக்கண்ணன் அவர்கள் மேற் கொண்ட ஓர் ஆய்வு இது**




அரை நூற்றாண்டுக்கு மேலாக அமைதியாக அர்ப்பணிப்புடன் ஆர்ப்பாட்டம் இன்றி ஊடகப் பணியாற்றி விட்டு எதுவுமே செய்யாதவர் போலும் - தமது பங்களிப்பில் எதுவுமே நடக்காதது போலும் - அமைதியாக முகத்தை வைத்துக் கொண்டு தன் மெல்லிய புன்சிரிப்பில் அரை நூற்றாண்டு காலச் சாதனையை முழுமையாக புதைத்து மறைத்து விட்ட மூத்த ஊடகவியலாளர் எஸ். ராதேயன் அவர்களுக்கு ஏப்பிரல் - யூன் 2023 செய்தியாளர் ஊடக தூது மடல் அர்ப்பணிக்கப்படுகிறது.

1988 இந்திய அமைதிப்படையின் காலத்தில் ஒரு மாதம் யாழ். கோட்டையில் சிறை - பின்னர் சொந்த வீட்டில் வீட்டுக்காவல் - 1990இல் இந்தியாவில் 05 வருடங்கள் என நினைக்கவும் மறக்கவும் முடியாத வாழ்வு அனுபவங்கள்.

பன்னிரண்டு வயதில் ஈழநாடு சிறுவர் பகுதியில் 165 அங்கத்துவ இலக்க பணி - 15 வருடங்கள் சிரித்திரனின் உதவியாசிரியர் பணி - வன்னியில் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் பின்னர் ஈழநாதம் பத்திரிகை உதவி ஆசிரியர் - வெள்ளிநாதம் என்ற வார இதழின் பிரதம ஆசிரியர் - யாழ் நகரில் ஈழநாடு பிரதம ஆசிரியர் என நினைக்கவும் மறக்கவும் முடியாத பத்திரிகை அனுபவங்கள்.

இவர் தற்போது உடல் நிலை நலிவுற்ற நிலையிலும் எழுத்துலக நண்பருக்கு ஆலோசனையை வழங்கி வருகிறார் என இந்த ஆய்வுக் கட்டுரையாளர் ஊடகவியலாளர் துவாரகா கலைக்கண்ணன் அவர்கள் தெரிவிக்கிறார்.

மூத்த ஊடகவியலாளர் எஸ். ராதேயன் அவர்களின் ஓய்வு காலம் அவர் ஆற்றிய அரை நூற்றாண்டு கால அர்ப்பணிப்பு மிக்க அளப்பரிய பணியின் நிறைவாகவும் மகிழ்வாகவும் இருக்க வேண்டுமென இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்து வாழ்க வளத்துடன் என வாழ்த்தித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கிறது செய்தியாளர் ஊடக தூது மடல்.

(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)

பன்னிரண்டு வயதில் பயணிக்க தொடங்கிய பேனா இன்றும் உண்மையின் குரலாய் - தமிழர் தேசத்தின் இருப்பிற்காய் பயணித்துக் கொண்டே இருக்கிறது.

ஈழத்தமிழ் ஊடகவியலாளர் வரிசையில் தனித்தமை வாய்ந்தவர் மூத்த ஊடகவியலாளர் ராதேயன் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய சிறீல சிறி ஆறுமுகநாவலரின் பரம்பரையில் சண்முகராஜா சரஸ்வதி ஆகியோரை பெற்றோராக கொண்ட தமிழ் மணம் கமழும் குடும்பத்தில் 04-08-1948 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் யோகரட்ணம். சுவாமி விபுலாந்தர் கற்பித்த யாழ்ப்பாணம் வைத்திஸ்வராக் கல்லூரியில் தனது கல்வியினை கற்று தேறினார். தமிழ் பாடத்தினை மிகவும் விருப்பத்துடனும் சிறப்புடனும் கற்றார்.

வித்துவான் பொன்.முத்துக்குமாரன் இவரது தமிழ் ஆசிரியராக இருந்தமையானால் இவரது தமிழ் புலமை மேலும் மிளிர காரணமாக இருந்தது. தமிழ் ஆக்க இலக்கியங்களில் இவரது அதீத ஆர்வத்திற்கு வித்துவான் பொன்.முத்துக்குமாரன் மேலும் உரமூட்டினார்.

யாழ்ப்பாணச் சமூகத்தினர் தமது பிள்ளைகள் வைத்தியராக, பொறியிலாளராக வர வேண்டும் என்ற கற்பனையிலேயே சிறகு விரிப்பார்கள். புனைக்கதை புலமைகளை புதிராகவே பார்ப்பார்கள். இதனால் எழுத்தாற்றல் உள்ள மாணவர்கள் பலர். தமது எழுத்துக்ககளை வெளிக்கொணர்வதில் தயக்கத்தை காட்டுவார்கள். அந்த வகையில் ராதேயனும் இலைமறை காயாக புனைப்பெயர்களில் மெல்ல மெல்ல எழுதத் தொடங்கினார்.

எஸ்.ராதேயன் என்ற பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுவன் - ஈழநாடு சிறுவர் பகுதியில் 165 அவரது அங்கத்துவ இலக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திஸ்வராக் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் சீனிவாசகம் ராதேயனின் எழுத்தாற்றலை இனங்கண்டு எழுதுவதற்கு ஊக்கமளித்து மட்டுமல்ல தான் உதவி முகாமையாளராக கடமையாற்றும் "ஈழநாடு" பத்திரிகையில் களம் அமைத்துக் கொடுத்தார். அப்போது ராதேயன் பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுவன். ஈழநாடு சிறுவர் பகுதியில் 165 இவரது அங்கத்துவ இலக்கமாக இருந்தது. அதே வேளை ஆதவன் பத்திரிகையிலும் எழுதி வந்தார்.

பன்னிரண்டு வயதில் ஊடகப் பயணத்தில் பயணிக்க தொடங்கிய இவரது பேனா இன்று வரை உண்மையின் குரலாக தமிழர் தேசத்தின் இருப்பிற்காக பயணித்துக்கொண்டிருக்கிறது.

சிறுவனாக இருந்த பொழுது எழுத்துலக நண்பர்களுடன் இணைந்து கையெழுத்து பிரதிகளை வெளியிட்டார். மாணவன், மதி, சுதந்திரன், மாஞ்சோலை இராகவன் என்ற பெயர்களில் கையெழுத்து பிரதிகள் வெளியாகின. இவரது அழகான கை எழுத்து இப்பிரதிகளுக்கு அழகை கொடுத்தன.



**வாசிப்பே சுவாசமாய் - ராதேயனின் ஆழமான எழுத்திற்கு அவரது நீண்ட வாசிப்பே காரணமாகும்**

'பானையில் இட்டால் தானே அகப்பையில் வரும்' ராதேயனின் ஆழமான எழுத்திற்கு அவரது நீண்ட வாசிப்பே காரணமாகும். வாசிப்பே அவரது சுவாசிப்பானது.

ரஸ்ய மொழிபெயர்ப்பு நூல்களை வாசிக்க தொடங்கிய ராதேயன் உள்ளூர் எழுத்தாளர்களின் எழுத்துக்களை படிப்பது மட்டுமல்ல அவ்வெழுத்தாளர்களை தேடிச்சென்று சந்தித்து உறவுகளை மேம்படுத்திக் கொண்டார்.

டொமினிக் ஜீவாவின் கதைகளை வாசித்து அவருடன் அவை பற்றி பேசிக்கொள்வார். அதே போலவே டானியல் போன்றோருடன் கதைத்து தன் அறிவை மேம்படுத்திக் கொண்டார். பேராசியர் சிவத்தம்பியுடனும் தமிழ் இலக்கியங்கள் தொடர்பாக பேசி தன்னை வளர்த்துக கொண்டார்.

மண்ணின் எழுத்தாளர்களுடன் இன்றும் நீண்ட உறவை பேணுகின்றார்.

விடுதலைப் போராட்டம் முகிழ் விடும் காலத்தில் தமிழ் இளைஞர்கள் அரசியல் கட்சிகளில் இணைந்து தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் சீன பொதுவுடமை கட்சியின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட பல இளைஞர்கள் மத்தியில் ராதேயனும் ஒருவர்.

இடதுசாரி தொடர்பு கட்சிக் கூட்டங்கள், அரசியல் கூட்டங்கள், இலக்கிய கூட்டங்கள் என எல்லாவற்றிலும் கலந்து கொண்டார். ஆனால் எந்த ஒரு கட்சியிலும் உறுப்பினராக இணைந்து கொள்ளவில்லை.

பொதுவுடமை கோட்பாடுகளிலும் அதன் சிந்தனை நீரோட்டங்களிலும் பெரிதும் ஈர்க்கப்பட்டு அதன் வழியில் செயற்பட்ட MAN முத்தையா என்பவரது நட்பு கிடைப்பெற்று அவர் மூலம் பல ஆங்கில நூல்களை வாசிக்கும் ஆர்வத்தை பெற்றுக் கொண்டார்.

MAN என்ற பட்டம் முத்தையாவுக்கு வரக்காரணம் அவர் ஒரு நல்ல மனிதனாக மனிதத்துடன் வாழந்தமையால் ஆகும்.

MAN முத்தையாவின் மனித பண்புகளால் ஈர்கப்பட்ட ராதேயன் பின்னாளில் தனது மனைவியுடன் சென்று அவரின் பாதம் பணிந்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

**15 வருடங்கள் சிரித்திரனின் உதவியாசிரியர்**

வீட்டின் பொருளாதாரத் தேவைக்காக ராதேயன் பல தொழில்களை அவ்வப்போது மேற்கொண்டாலும் எழுத்துலக பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தார். வேலை முடித்து விட்டு இரவு நேரங்களில் சிரித்திரன் ஆசிரியருக்கு உதவியாளராக செயற்பட்டார். பின்னர் முழுநேரமாகவே சிரித்திரன் வார இதழில் பணியாற்றினார். 15 வருடங்கள் சிரித்திரனுடன் பயணித்த ராதேயன் சிரித்திரனின் உதவியாசியராக பணியாற்றினார்.

மாமனிதர் சிரித்திரன் சுந்தர் அவர்கள் ராதேயனின் மானசீக குருவாக விளங்குகின்றார். 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் தனது ஊடக பணியின் போது ஏற்பட்ட உறவால் சிரித்திரன் சுந்தரை தனது மானசீக குருவாக கொண்டிருந்தார் என்பது இங்கு நினைவில் கொள்ளதக்கது.

**மக்களை போராட்டத்தின் வழியில் பயணிக்க வைக்க ஈழமுரசு பத்திரிகை ஊடகம் ஒன்று அவசியமானது**

விடுதலைப் போராட்டத்தின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் ஒரு பெரும் மையமாக திகழ்ந்தது. மக்களை போராட்டத்தின் வழியில் பயணிக்க வைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகம் ஒன்று அவசியமானது. குறிப்பாக அச்சு ஊடகமாக பத்திகையின் அவசியம் உணரப்பட்டது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் வெளிந்த ஈழமுரசு பத்திரிகை பொதுவுடமை ஆக்கப்பட்டமையால் புதிய சிந்தனைகளுடன் புதிய வடிவில் ஈழமுரசு மக்களின் கரங்களைச் சென்றடைய செய்த பெருமைக்குரியவர்களில் ராதேயன் முதன்மையானவர்.

***1988இல் யாழ் கோட்டையில் ஒரு மாதம் சிறை பின்னர் வீட்டுக்காவல் சிறை - 1990இல் இந்தியச் சிறையில் 05 வருடங்கள்***


*1988*ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'அமைதிப்படை' என்றஅமைதியைக்குலைத்தஇந்திய அமைதிப்படையால் கைதாகி ஒரு மாதம் யாழ் கோட்டை சிறையில் தடுத்து வைக்கப்பட்டார். இதன் பின்னர் அவரது வீட்டிலேயே வீட்டுக்காவலில் வைக்கபட்டிருந்தார்.

*1990*ஆம் ஆண்டு ஊடகம்சார் பணி ஒன்றிற்காக இந்தியா சென்ற வேளை இந்தியாவில் கைது செய்யப்பட்டு 05 வருடங்கள் இந்தியச் சிறையில் கழிக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது.

'கல்விச்சாலைகள் திறக்கப்படும் போது சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' என்ற பொன் மொழியைத்தான் அறிந்திருக்கின்றோம். ஆனால் சிறைச்சாலையே கல்விச்சாலையாக மாற்றிய பெருமைக்குரியவர் ராதேயன்.

சிறைச்சாலையில் எழுத்தறிவு அற்ற சக கைதிகளுக்கு கற்பித்து எழுதறிவித்தவன் இறைவனாவான் என்ற பொன்மொழிக்கு பொருத்தமானார்.

சிறை வாழ்க்கையில் மனம் உடைந்து போகாது சிந்தனையை வளர்ந்துக் கொண்டார். சிறையில் இருந்து "என்னைச் சுற்றும் உலகம்" என்ற கவிதை தொகுதியை எழுதினார். அது மட்டுமல்ல *1948-1990* வரையிலான ஈழ அரசியல் கள நிலவரங்களை கொண்ட வரலாற்று நாவல் ஒன்றை எழுதினார். ஆனால் இதுவரை அந்நூல் வெளிவராமல் உள்ளமை எம் இனத்தின் துர்அதிஸ்ரமே.



தமிழ் நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் கவிஞர்கள் பலருடன் நல்ல நட்பைக் கொண்டிருக்கிறார். அதே வேளை புலம்பெயர் ஈழத் தமிழ் கவிஞர்களான ஜெயபாலன், சேரன் போன்றோர் இவரது நண்பர்களே ஆவர்.

*1995*ஆம் ஆண்டு இந்தியச் சிறையில் இருந்து விடுதலையாகிய ராதேயன் தாயகம் வந்தடைந்த போது யாழ்ப்பாண இடம் பெயர்வு இடம் பெற்றது. யாழ்ப்பாண இடம் பெயர்வில் ஏறத்தாள ஐந்து இலட்சத்து 25ஆயிரம் மக்கள் இடம்பெயந்தனர்.

***வன்னியில் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் பின்னர் ஈழநாதம் பத்திரிகை உதவி ஆசிரியர் - 'வெள்ளிநாதம்' என்ற வார இதழின் பிரதம ஆசிரியர் - யாழ் நகரில் 'நமது ஈழநாடு' பிரதம ஆசிரியர்***

வன்னித்தாய் யாழ் மக்களை அரவணைத்துக் கொண்டாள். வன்னி மீண்டும் அரசியல் களமானது. அங்கு ஈழநாடு பத்திரிகையில் ஆசிரியராக செயற் பட்டார். பின்னர் காலத்தின் தேவை கருதி ஆங்கில கட்டுரைகளை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

அக்கால பகுதியில் புதுக்குடியிருப்பில் கோட்டக்கல்வி அதிகாரி குருகுலராஜாவின் அனுசரணையில் முறைசாரக் கல்விப் பகுதியுடன் இணைந்து நாட்டுபற்றாளர், ஊடகவியாளர் சத்தியமூர்த்தியை தொடர்பாளராக நியமித்து ஊடக கற்கை நெறியினை நடத்தினார். இதில் பல இளையவர்கள் ஊடக கற்கையைக் கற்று தேறினார்கள். அவ்வூடக மாணவர்களால் மாதம் தோறும் 'பூராயம்' என்ற சஞ்கையை வெளியிட வைத்தார்.

பின்னர் ஈழநாதம் பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றினார். பின்பு ஈழநாதம் 'வெள்ளிநாதம்' என்ற வார இதழை வெளியிட்டது. அதன் பிரதம ஆசிரியராக இருந்தார். வன்னியில் பல இளம் எழுத்தாளர்களை உருவாக்கினார்.

வெள்ளி நாதத்தில் பிறமுக அறிமுகம், நறுக்கென நாலு என வாராந்தம் எழுதி வந்தார்.

*2002*ஆம் ஆண்டு சமாதான காலத்தில் யாழ்ப்பாணத்தில் 'நமது ஈழநாடு' வெளிவந்தது. இதன் ஆசிரியராக ராகுராம் இருந்தார். அவருடன் இணைந்து பத்திரிகையை மேலும் சிறப்புடன் வெளியிடும் நோக்குடன் அதன் பிரதம ஆசிரியராக செயற்பட்டார்.

பல புதிய விடயங்களை உள்ளடக்கி 'நமது ஈழநாடு' வெளிவந்தது. ஞாயிற்றுக்கிழமை நடுப்பக்கத்தில் விளையாட்டுச் செய்திகளைப் பல வர்ணத்தில் வெளியிட்டு புதிய புரட்சியை ஏற்படுத்தினார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிறப்புடன் வெளிவந்தது.

ஞாயிறு - விளையாட்டு திங்கள் - இலக்கியம் செவ்வாய் - அறிவியல் புதன் - அரசியல் வியாழன் - நேர்காணல் வெள்ளி - பெண்ணியம் சனி - சிறுவர் பகுதி என ஒரு கதம்பமாக பல தரப்பட்ட வாசகர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருப்திப்படுத்தும் வகையில் 'நமது ஈழநாடு' வெளிவந்தது. சமாதான காலத்தில் சிங்கள சகோதரர்கள் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை புரிந்து கொள்டும் என்ற கருத்தை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் வானவில் என்ற அர்த்தத்தை கொண்ட தேதுன்ன என்ற சிங்கள வார பத்திரிகை வெளிவர வழிகோலினார்.

**கிளிநொச்சி அறிவியல் நகர் தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி அதிபர் - சிரித்தின் இதழ் மீள் பிரசுரம் - யாழ்ப்பாணத்தில் ஊடக அமையம்**

இளையவர்களை வாசிக்க தூண்டியதுடன் எழுதவும் களம் அமைத்து கொடுத்தார். மற்றவர்களை வளர்க்கும் இவ்வியல்புக்கு பொருத்தமாக கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட தமிழ் ஊடக அறிவியல் கல்லூரிக்கு அதிபராக நியமனமானார். அதே சமயம் அங்கு ஊடக விரிவுரையாளராகவும் செயற்பட்டார். ராதேயனின் உதவியாளராக ஊடகவியாளர் சத்தியமூர்த்தி செயற்பட்டார்.

இறுதி யுத்தம் நிறைவுக்கு வரும் வரை ஊடகப் பணியினை மேற்கொண்டிருந்தார். அக்காலப் பகுதியில் எறிகணை தாக்குதலில் காலில் காயம் ஏற்பட்டது. முள்ளிவாய்கால் முடிவில் மக்களோடு மக்களாக தனது குடும்பத்துடன் இடம்பெயர்ந்து நலன்புரி என சொல்லப்படும் இடைத்தங்கல் முகாமில் தங்கி பின்னர் யாழ். மண்ணை வந்தடைந்தார்.

யுத்தத்திற்கு பின்னரும் கருத்துச் சுதந்திரம் கேள்விக் குறியாகவே உள்ளது. பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் தமிழில் வெளிவரவர வேண்டும் என்ற பரந்த எண்ணங்கொண்ட ராதேயன் பல பத்திரிகை சஞ்கைகளுக்கு ஆலோசகராக செயற்பட்டார். 2021இல் சிரித்தின் இதழை மீள் பிரசுரம் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடக அமைய ஒன்று அவசியம் என்ற எண்ணத்தை றட்ணம் தயாபரனுக்கு ஆலோசனையாக வழங்கி அதனை ஆரம்பித்து வைத்தார். அதன் வழி வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்களில் ஊடக மையங்கள் செயற்படுகின்றன.

புதியவன், தீபம் போன்ற வாரப்பத்திரிகை முதல்வன், தமிழமுது எனப்பல சஞ்சிகளுக்கும் வழிகாட்டியாக இருந்தார்.

உதயன் பத்திரிகை ஆசிரியர் கானமயில்நாதன் அவர்களின் மறைவுக்கு பின் அப்பத்திரிகையின் சுழற்சிக்கு இளம் பத்திரிகை ஆசிரியர்களுக்கு சில மாதங்கள் வழிகாட்டினார்.


பல ஊடக விருதுகளை பெற்றுக்கொண்ட ராதேயன் விருதுகள் கொடுத்து கௌரவிக்க வேண்டியவர்களை அடையாளம் காட்டும் ஒருவராக உள்ளார்.

தற்போது உடல் நிலை நலிவுற்ற நிலையிலும் எழுத்துலக நண்பருக்கு ஆலோசனையை வழங்கி வருகிறார்.

**'முள்ளிவாய்காலில் புதையுண்டது மனித உடல்கள் மட்டுல்ல மனித உரிமைகளும் மனித நேயமும் உலகின் மனச்சாட்சியும்தான் என்பதனை சமகாலம் பேசத் தயங்கலாம், தடுமாறலாம்.**

**ஆனால் வரலாறு பேசவே செய்யும் பதிவும் செய்யும், ஆவணப்படுத்தும் இதுவும் கூட அவ்வளவு சுலபமாக நிகழ்ப்போவதில்லை.**

**இதற்கும் போராடத்தான் வேண்டும்.**
**இழப்புக்களையும்**
**எதிர்ப்புக்களையும்**
**எதிர்கொள்ளத்தான் வேண்டும்.**
**இந்த எதிர்கொள்ளலைச் சமாளித்து வெல்வதும் எமது வரலாற்றுப் பணி'** என்ற
என்ற பதிவை ராதேயன் பதிவிட்டுள்ளார்.




உசாத்துணை
01.கனலி-2020 - யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் மாணவர்களின் பயிற்சி சஞ்சிகை
02.தளவாசல் - கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்-2016
03.யாழ்ப்பாண இடம்பெயர்வு - கலாநிதி. கா.குணபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**21 மே 2023**
**57ஆவது**
**உலக**
**சமூகத்தொடர்பு**
**நாள்**

# ஒருவர் மற்றவருக்கு செவிமடுப்பதே மற்றவர்களுக்கு நாம் கொடுக்கவல்ல மிகச்சிறந்த பரிசு - திருத்தந்தை பிரான்சிஸ்

***கருப் பொருள் இதயத்தோடு பேசுதல் : பிறரன்பில் உண்மையை செயலாக்குதல்***

சமூகத்தொடர்பாளர்களின் பாதுகாவலராகிய புனித பிரான்சீஸ் சலேசியாரின் விழாவான சனவரி 24ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 57ஆவது உலக தகவல் சமூகத்தொடர்பு நாளுக்கான செய்தியை இதயத்தோடு பேசுதல் : பிறரன்பில் உண்மையை செயலாக்குதல் என்ற மையக்கருத்துடன் வெளியிட்டார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திறந்த இதயத்தோடும் விரித்த கைகளோடும் உரையாடுவோம், மற்றவர்களுக்கு தூய இதயத்துடன் செவிமடுப்பதன் வழியாகவே அன்பில் உண்மையைப் பின்பற்றி நம்மால் பேசமுடியும் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சென்று பார்த்து செவிமடுத்தல் என்ற கருப்பொருளானது 2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாக இருந்த நிலையில் இவ்வாண்டு மற்றவர்களுக்கு தூய இதயத்துடன் செவிமடுப்பதன் வழியாகவே, அன்பில் உண்மையைப் பின்பற்றி நம்மால் பேசமுடியும் என்றும் திறந்த இதயத்தோடும் விரித்த கைகளோடும் தகவல் தொடர்பில் ஈடுபடுவதற்கான அர்ப்பணம் ஒவ்வொருவருக்கும் உரியது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சமூகத்தொடர்பாளர்களின் பாதுகாவலராகிய புனித பிரான்சீஸ் சலேசியார் உயிரிழந்த 400 ஆண்டு நிறைவில் சிறப்பிக்கப்படும் 57ஆவது உலக சமூகத்தொடர்பு நாளானது திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் அவர்களால் பிரான்சீஸ் சலேசியாரை பத்திரிகையாளருக்குப் பாதுகாவலராக அறிவிக்கப்பட்டதன் நூற்றாண்டையும் சிறப்பித்து நிற்கிறது.

***57ஆவது உலக சமூகத்தொடர்பு நாளுக்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி***

ஒருவர் மற்றவருக்கு செவிமடுப்பதே மற்றவர்களுக்கு நாம் கொடுக்கவல்ல மிகச்சிறந்த பரிசு. முன்சார்பு எண்ணங்களின்றி கவனமுடன் திறந்த மனதுடன் ஒருவருக்கு செவிமடுப்பதன் வழியாகவே கனிவுடனும் கருணையுடனும் நெருக்கத்துடனும் நாம் மற்றவர்களுடன் உரையாடமுடியும்.

செவிமடுப்பதில் தாழ்ச்சியையும் உரையாடுவதில் கனிவையும் அடிப்படையாகக் கொண்ட சமூகத் தொடர்பு முறை என்பது உண்மை மற்றும் பிறரன்பிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலக்கட்டத்தில் அமைதிக் கலாச்சாரத்துடனும் பேச்சுவார்த்தைகளுக்குரிய மனப்பான்மையுடனும் ஒப்புரவுடனும் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை நாம் உணரவேண்டும்.

சிறந்த கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு சரியான வார்த்தைகளைப் பயன்படுத்துவோம். இதயத்திலிருந்து எப்போதும் பேசுவோம்.

செல்லவும் பார்க்கவும் கேட்கவும் நம்மைத் தூண்டுவது இதயம். மற்றும் திறந்த இதயத்துடன் வரவேற்கவும் தொடர்பு கொள்ளவும் நம்மைத் தூண்டுவது இதயம். என்றும் பொறுமையுடன் காத்திருத்தல் நமது பார்வையை உறுதிப்படுத்தும் - செவிமடுத்தலைப் பயிற்சிக்கும் - உரையாடல் மற்றும் பகிர்கின் இயக்கவியலில் நுழைய - அன்புடன் தொடர்புகொள்ள உதவும்.

கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை. முட்புதர்களில் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்ப்பாருமில்லை. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும் என்று இயேசு லூக்கா நற்செய்தியில் எச்சரிக்கிறார் (லூக்கா 6:44)

இதன்படி சமூகத்தொடர்பாளர்கள் ஒவ்வொருவரும் தங்களின் இதயத்தை தூய்மைப்படுத்துவது அவசியம்.

தூய்மையான இதயத்துடன் செவிமடுப்பதன்



வழியாகவும் பேசுவதன் வழியாகவும் மட்டுமே உண்மை என்னவென்று கண்டறிய முடியும்.

எம்மாவுக்குச் செல்லும் வழியில் சீடர்களுடன் உரையாடும் வழிப்போக்கராக செயல்பட்ட இயேசுவில் இத்தகைய செயலைக் காணலாம்.

உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களின் இதயத்தோடு பேசுகிறார் - மனதில் துன்பத்தோடு பயணித்த அவர்களோடு உடன் செல்கிறார் - தன்னை முன்னிறுத்தாமலும் தன் கருத்துக்களைப் புகுத்தாமலும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதன் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அவர்களின் மனதை அன்புடன் திறக்கிறார்.

நாம் அனைவரும் உண்மையைத் தேடவும் சொல்லவும் பணியாற்றவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

குறிப்பாக கிறிஸ்தவர்களாகிய நாம் நாவை தீமையிலிருந்து காத்துக்கொள்ளும்படி தொடர்ந்து அறிவுறுத்தப்படுகிறோம். கெட்ட வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும்படி தேவைக்கு ஏற்றவாறு அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள் (எபேசியர் 4:29) என திருவிவிலியம் நமக்கு வலியுறுத்துகின்றது.

**அறிவியல் முன்னேற்றத்தில் கணினிப் பயன்பாடுகள் இல்லாத துறைகளே இல்லை**

வளர்ந்துவரும் அறிவியல் முன்னேற்றத்தில் மிக இன்றியமையாத பங்கு வகிக்கும் கணினிப் பயன்பாடுகள் இல்லாத துறைகளே இல்லை.

கிராமங்களில் கூட மிக சாதாரணமாக அதீத வளர்ச்சியடைந்து வரும் இணையக் கலாச்சாரம் நன்மை தீமைகள் என இரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளது.

சிறுவர்கள்முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் ஈர்க்கும் சமூக வலைதளங்களினால் பல நன்மைகள் இருந்தாலும் பல குற்றங்களும் பெருகி வருகின்றன.

சமூக வலைதளங்களைப் பயன்படுத்துபவர்கள் அதில் உள்ள நன்மை தீமைகளை அறிந்து அளவோடும் பாதுகாப்போடும் பயன்படுத்த வேண்டும்.

விவேகத்துடனும் விழிப்புணர்வுடனும் பயன்படுத்துவது எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் நன்மை பயக்கும்.


அனைவருக்கும் 57ஆவது உலக தகவல் சமூகத் தொடர்பு நாள் நல்வாழ்த்துக்கள்

**திருத்தந்தை பிரான்சீஸ் சமூகத்தொடர்பாளர்களின் பாதுகாவலராகிய புனித பிரான்சீஸ் சலேசியாரின் விழாவான 24 சனவரி 2023 அன்று வத்திக்கானில் வெளியிடப்பட்டது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் செய்தியாளர்கள் தமக்கிடையே ஒரு புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும்

## யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை



செய்தியாளர் என்ற ஊடக மடல் ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம் என்ற விருது வாக்குடன் இலங்கையின் தமிழ்பேசும் செய்தியாளர்களை இணைக்கின்ற செய்தி மடல் ஒன்று வெளிவர இருப்பது வரவேற்கத்தக்க மகிழ்வான ஒரு விடயமாகும்.

ஊடகம் என்பது இன்று உலகளாவிய ரீதியில் அனைத்துத் துறைகளையும் ஊடறுத்து இன - மத - மொழி - பிரதேச மற்றும் கண்டங்களின் வேறுபாடுகளைத் தாண்டி அனைத்து செய்தியாளர்களையும் இணைக்கின்ற ஒரு பாலமாக உள்ளது.

இலங்கையின் தமிழ் சிங்கள் இனங்களை இணைக்கின்ற பாலமாக கத்தோலிக்க சமயமும் ஊடகமும் உள்ளது. தமிழ் சிங்களக் கத்தோலிக்கர்கள் உள்ளனர். தமிழ் சிங்கள ஊடகவியலாளர்கள் உள்ளனர்.

இந்த இரண்டு இணைப்புப் பாலங்களும் உண்மையாக இதய சுத்தியுடன் செயற்படுமானால் அது இலங்கையின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு பல சாதனைகளை நிகழ்த்த நிட்சயம் உதவும். இலங்கையில் செய்திப் பணியாற்றுகின்ற தமிழ் செய்தியாளர்கள் தமது செய்திப் பணியில் தமக்கிடையில் உள்ள பல தனித்துவங்களையும் வேறுபாடுகளையும் சிலவேளை தமது பணிசார் முரண்பாடுகளையும் கொண்டிருந்தாலும் அவை அனைத்தையும் கடந்து தமிழ் செய்தியாளர்கள் என்ற அடிப்படையில் தமக்கிடையே ஒரு இணக்கப்பாட்டையும் புரிந்துணர்வையும் அன்புறவையும் கொண்டிருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

அதற்கு வழிவகுக்கும் பணியை செய்தியாளர் என்ற இந்த ஊடக செய்தி மடல் சிறப்பாக ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.


இதனை விட தமிழ் செய்தியாளருக்கான சமகால அறிவுரைகள் - தேவையான புதிய அறிவித்தல்கள் - புதிய நகர்வுகளுக்கான விளக்கங்கள் போன்ற பல விடயங்களை தரும் ஒரு மடலாக இது அமைய வேண்டும்.

உன்னதமான இப்பணியை செய்தியாளர் என்ற இந்த ஊடக செய்தி மடல் ஆற்றும் - ஆற்ற வேண்டும் என விரும்பி எமது இறையாசீர் மிக்க வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறோம்.

**யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**

## ஊடகவியலாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்க செய்தியாளர் என்ற இந்த ஊடக தூது மடல் முன்வர வேண்டும்

–இது வடமராட்சி புலோலி மூத்த ஊடகவியலாளர் எஸ்.தில்லைநாதன் அவர்களின் வேண்டுதல் இது



செய்தியாளர் என்ற ஊடக தூதுமடல் வெளிவரவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இத்தூதுமடலை வெளியிட முன்வந்த பிசப் சவுந்தரம் மீடியா சென்ரறிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஊடகத் தூது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஒரு வழி காட்டியாகவும் அவர்கள் தொழில்சார் மேம்படுத்தலுக்கான ஊடகத் தொழிற் கற்கைகளையும் அவ்வப்போது மேற்கொள்ளவும் பெரிதும் உதவ வேண்டும்.

அத்துடன் கடந்த காலங்களில் ஊடகங்களின் வளர்ச்சிக்காக பெரிதும் கை கொடுத்த அமரத்துவம் அடைந்த காவு கொள்ளப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுகளை அவ்வப்போது வெளிக்கொணருவதுடன் கடமையில் உள்ள ஊடகவியலாளர்கள் தங்கள் அனுபவங்களையும் வெளிப்படுத்த களம் அமைத்து கொடுக்க வேண்டும்.

தொடர்ந்தும் காலத்திற்குகேற்ப ஊடகவியலாளர்களுக்குத் தேவையான தகவல்களையும் வழங்க முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பாதுகாப்போம்

### - இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஏற்பாட்டில் வவுனியாவில் பயிற்சி



**தகவல் தரும் செய்தியாளர் : ஜெயம் ஜெகன்**

15 மே 2023 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வவுனியா மூன்றுமுறிப்பு நோர்த்வே கோட்டலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 35 தமிழ் ஊடகவியலாளருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பாதுகாப்போம் என்னும் தலைப்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் பயிற்சி பட்டறை ஒன்று நடைபெற்றுள்ளது.


மேற்படி பயிற்சியை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. உபாலி அபேரத்ன மற்றும் தகவலறியும் உரிமைக்கான ஆணையத்தின் ஆணையாளர்களான சட்டத்தரணி கிஸ்காலி பின்டோ ஜயவர்தன - சட்டத்தரணி ஜகத் லியன ஆராச்சி - எம். நஹியா மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஆலோசகர் அஸ்வினி நடேசன் மற்றறும் ஆர்த்தி ஆகியோர் நடத்தினர்.

இந்த பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு (01) தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான பிரஜைகள் (02) ஊடகத்துறைக்கான இலகு வழிகள் - அச்சு மற்றும் இணைய ஊடக அறிக்கையிடலுக்கான அடிப்படைகள் ஆகிய இரு நூல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர்களுக்கும் சமூக சேவை செயற்பாட்டாளர்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் தெரிந்து இருத்தல் அவசியம் என்பதை உணர்த்தும் வகையில் மேற்படி பயிற்சி வகுப்பு அமைந்திருந்தது என பயிற்சி பெற்றவர்கள் தெரிவித்தனர்.

# இலங்கையில் யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் ஊடக சுதந்திரத்தில் முன்னேற்றமா???

**பத்திரிகை சுதந்திர தர வரிசையில் 2022ஆம் ஆண்டு 146ஆம் இடத்தில் இருந்த இலங்கை 2023ஆம் ஆண்டு 135ஆவது இடத்திற்கு வந்துள்ளது.**



இலங்கை நாட்டில் வாழும் இரண்டே இனங்களுக்கிடையில் 30 ஆண்டு காலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளாகியும் ஊடக சுதந்திர விடயத்தில் இலங்கை இன்னும் வேக முன்னேற்றம் காட்டாது மிகவும் பின்தங்கிய நிலை நாடாகவே இருப்பது வேதனையுடன் நோக்கப்பட வேண்டிய உண்மையாகும்.

எல்லையற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு 03 மே மாதம் 2023ஆம் ஆண்டு வெளியிட்ட கருத்துக் கணிப்பின்படி ஊடகச் சுதந்திரம் காணப்படும் 180 உலக நாடுகள் வரிசையில் இலங்கை 135ஆவது இடத்தில் உள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் உலக பத்திரிகை சுதந்திர தினம் மே மாதம் 03ஆம் திகதி கொண்டாடப்படுகிறது என்பது அனைவரும் அறிந்ததே.

1993ஆம் ஆண்டிலிருந்து உலக நாடுகள் சபையால் உலக பத்திரிகை சுதந்திர தினம் ஒவ்வொரு மே 3ஆம் திகதியும் உலக பத்திரிகை சுதந்திர தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

1991ஆம் ஆண்டு யுனெஸ்கோ மூலம் ஆபிரிக்க பத்திரிகையாளர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நாள் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான யுனெஸ்கோ அறிக்கையின்படி 455 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2022ஆம் ஆண்டில் 86 பத்திரிகையாளர்கள கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் இந்தியாவில் மட்டும் 22 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனக்கணக்கிடப்பட்டுள்ளது. இந்த கணக்கு 2021ஆம் ஆண்டின் 55 பேர் என்ற கணக்கை விட அதிகமாகும்.

யுனெஸ்கோவின் இந்த அறிக்கையின்படி 04 நாட்களுக்கு ஒரு பத்திரிகையாளர் கொல்லப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. இதில் பத்தில் ஒரு வழக்கு மட்டுமே முடிவுக்கு வந்து நீதி கிடைப்பதாகவும் விமர்சனம் உள்ளது.

கடந்த 2022 டிசெம்பர் கணக்கெடுப்பின்படி உலகம் முழுவதும் 363 பத்திரிகையாளர்கள் தனது கடமையை செய்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

உலகில் உள்ள 180 நாடுகளில் நோர்வே நாடு முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடத்தில் டென்மார்க் நாடும் மூன்றாம் இடத்தில் சுவீடன் நாடும் உள்ளன. 2021ஆம் ஆண்டில் உலக பத்திரிகை சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 127ஆவது இடத்தில் இருந்தது. 2020இல் 127ஆவது இடத்திலும் 2019இல் 126ஆவது இடத்திலும் 2018இல் 131ஆவது இடத்திலும் இருந்தது.

**இலங்கையில் யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் - ஊடக சுதந்திரத்தில் முன்னேற்றமா??? என்ற கேள்விக்கு இல்லை போதாது என்றே பதில் தரப்பட வேண்டி உள்ளமை வருத்தத்தைத் தர வேண்டிய ஒரு விடயமாகும்.**

# மூத்த ஊடகவியலாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் நூல்



மூத்த ஊடகவியலாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் என்ற நூல் 27 மே 2023 அன்று வவனியா கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் என்ற நூல் வெளியிடப்பட்டது.

வவுனியா வடக்கு வலய ஆசிரிய மத்திய நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா தேசிய கல்வியிற் கல்லூரியின் ஓய்வு நிலை உபபீடாதிபதி ந.பார்த்தீபன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

மூத்த ஊடகவியலாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் சமூக வேறுபாடுகள், கருத்து மோதல்கள் மற்றும் முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஊடக ஆளுமையாக அவர் செய்திகளை கையாண்ட விதமே அவரை உச்சத்தில் உயர்த்தியது. என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் தமது இரங்கல் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். மூத்த ஊடகப் பேராசானை தமிழர் தேசம் இழந்தமை தமிழர் தேசத்திற்கும், உலகிற்கும் பேரிழப்பாகும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

# விருப்பங்கள் விமர்சனங்கள் அல்ல என்பதை உணர்த்தியுள்ள மாணிக்கவாசகத்தின் நூல்

**– ஊடகவியலாளர் அ.நிக்ஸன்**

வயதானவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவு இருக்காது என்பர். அல்லது வயதானவர்கள் அதனைக் கற்கவே முடியாதென்பர். ஆனால் இவருக்குப் புதிய தகவல் தொழில்நுட்பத்தின் அத்தனை செயல் முறைகளும் நன்கு பரீட்சயமாக இருந்தன.

இதன் பிரகாரம் இந் நூல், மாணிக்கவாசகத்தின் இதழியல் வகிபாகம் மற்றும் செய்தி ஒன்று எவ்வாறு கருவாகி உருவாகி மலர்கிறது என்கிற வரையறையையும், செய்தியின் தன்மைகள் பற்றியும் எடுத்துரைக்கிறது. அதாவது செய்தியாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய சமூக வகிபாகத்தையும் அதற்கான அர்ப்பணிப்பையும் இந் நூல் படம்போட்டுக் காண்பிக்கிறது. அறுபத்து ஆறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள அவருடைய செய்தி அனுபவம் ஒவ்வொன்றும், உறுதியான - நியாயமான தகவல்களை வெளிப்படுத்துகின்றன. விருப்பங்கள், விமர்சனங்கள் அல்ல என்பதை உணர்த்தியுள்ள மாணிக்கவாசகத்தின் நூல் என்ற தலைப்பில் ஊடகவியலாளர் அ.நிக்ஸன் அவர்கள் எழுதிய நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் என்ற நூல் விமரிசனத்தை தருவோம் விரைவில்

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் -பிசப் சவுந்தரம் மீடியா சென்ரறின் அடுத்த நகர்வு




பிசப் சவுந்தரம் மீடியா சென்ரறின் அடுத்த நகர்வாக பிசப் யஸ்ரீன் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் 27 ஜனவரி 2023 அன்று பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இலக்கம் 23 - 25 பெரிய தோட்டம் பீச் றோட் யாழ்ப்பாணம் என்ற புதிய முகவரியில் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வின் பிரதம விருந்தினாரக இலண்டனில் இருந்து வருகை தந்த நூல்தேட்டம் ஆசிரியர் மற்றும் நூலகவியலாளர் திருவாளர் என். செல்வராஜா அவர்கள் தமதுரையில் நீங்கள் ஊடகத்துறைக்கான உங்களிடம் உள்ள ஆங்கில நூல்களின் விபரங்களைத் தருவீர்கள் என்றால் இல்லாதவற்றை நான் கப்பலில் அனுப்பி வைப்பேன். ஊடகத்துறை என்னும் போது தேடல் முக்கிய மானதாகவுள்ளது. ஊடகவியலாளாகள் தங்களை வளப்படுத்திக் கொள்ளவேண்டும் அவர்கள் துறையை வளர்த்துக் கொள்வதற்கு நிறைய வாசிக்கவேண்டும். இவர்களுக்கான தேவைகளை என்னால் முடிந்தளவு நிறைவு செய்து கொடுப்பேன் என்றார்.


சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் எஸ். இரகுராம் - கலைப்பீடாதிபதி மற்றும் முன்னள் தலைவர் ஊடகக் கற்கைகள்துறை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அவர்கள் தமதுரையில் இந்த புத்தகசாலையின் கடற்கரைசார் சூழல் வாசிப்பதற்கான மகிழ்வான அழகான சூழலாக அமைந்துள்ளது.

இங்கு பல்கலைக்கழக மாணவர்கள் வருவார்கள். இந்த நூலகம் அச்சடிக்கப்பட்ட நூல்களை வழங்கும் நிலையமாக மட்டும் இல்லாமல் மீடியா றீசேச் சென்ரர் போன்ற பல பரிமானங்களுடன் திகழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கிருத்திகா தர்மராஜா - மேனாள் ஊடக விரிவுரையாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மற்றும் சுயாதீன ஊடக மற்றும் பால்நிலை ஆலோசகர் அவர்கள் இதனை புத்தகசாலையாக மட்டுமன்றி தமது துறைசார்ந்த விடையங்களை ஆலோசிப்பதற்கான இடமாக அமையும் என்பது எனது எண்ணம். இந்த விடையங்கள் எல்லோரையும் போய்ச் சேரவேண்டும் என்றும் புத்தகசாலையின் திறப்புவிழாவிற்கு வாழ்த்தக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட எங்கட புத்தகங்கள் சஞ்சிகையின் ஆலோசகர் திருவாளர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குலசேகரம் வசீகரன் அவர்கள் இந்த நூலகம் வரவேற்கத்தக்கது இந்த நூலகம் தொடர்ச்சியாக இயங்க வேண்டும் என்று வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பிசப் யஸ்ரீன் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் இயக்குனர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தமது ஏற்புரையில் அனைவருக்கும் நன்றிகள். நாங்கள் எப்போதும் உங்களின் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அன்போடு பெற்றுக் கொள்வோம். மகிழ்வோடு நிறைவு செய்வோம். சிறிதாக தொடங்குகின்றோம் நிச்சயம் பெரிதாக சாதிப்போம் என்றார்.

பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் பற்றிய விரிவான முழுமையான ஆக்கத்தை செய்தியாளர் ஊடக தூது மடல் உதவி ஆசிரியர் மரியதாஸ் நியூட்டன் அவர்கள் அடுத்த இதழில் தருவார்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**

---

# ஊடகத் தொழிலைச் செய்யப் புறப்பட்டவன் தேடித் தேடிக் கற்கவேண்டும் புதிய தொழில் நுட்பங்களை உடனடியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும்

## ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் – தராகி தமிழ் ஊடகவியலாளர்களுக்குச் சொல்லித் தந்த பாடம்

**றுசாங்கன் கோடீஸ்வரன் அவர்கள் தனது முகநூல் பதிவில் வெளியிட்ட இந்த ஊடகவியலாளர் சிவராமின் உரையையும் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி பற்றிய முழு விபரங்களையும் விரைவில் தருவோம்.**
**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**






26 நவம்பர் 2004ஆம் ஆண்டு கிளிநொச்சி அறிவியல் நகரில் தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அமரர்களான விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் எஸ்.பி. தமிழ்செல்வன் மற்றும் மூத்த ஊடகவியலாளர் எஸ்.கோபாலரட்ணம் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டினர். மேற்படி கிளிநொச்சி அறிவியல் நகர் தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் அதிபராக மூத்த ஊடகவியலாளர் ராதேயன் அவர்கள் செயற்பட்டார்.

ஊடக வளங்கள் பயிற்சி நிலைய பயிற்சி இணைப்பாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமை தாங்கிய மேற்படி நிகழ்வில் மறைந்த ஊடகவியலாளர் பி.சத்தியமூர்த்தி வரவேற்புரையை நிகழ்த்தினார்.


ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் இயக்குனர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் மறைந்த ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் - தராகி ஆகியோர் உரையாற்றினர். அப்போதே ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் - தராகி ஊடகத் தொழிலைச் செய்யப் புறப்பட்டவன் தேடித் தேடிக் கற்கவேண்டும் - புதிய தொழில் நுட்பங்களை உடனடியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். 02 யூலை 2006ஆம் ஆண்டு மேற்படி தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த மூத்த ஊடகவியலாளர் கானமயில்நாதன் அவர்கள் உலகில் மறைந்தாலும் தனது எழுத்துக்களால் வாழ்ந்து கொண்டிருப்பார்

## - செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்





**தகவல் தரும்**
**செய்தியாளர் : ஜெயம் ஜெகன்**

30 டிசெம்பர் 2021அன்று யாழ் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி சோமசுந்தரப்புலவர் அரங்கில் பண்டிதர் கடம்பேஸ்வரன் தலைமையில் மறைந்த மூத்த ஊடகவியலாளர் திரு ம.வ. கானமயில்நாதன் அவர்களின் நினைவுச் சிறப்பு நிகழ்வாக ஈழத்தமிழ் ஊடகத்துறையில் காலமெல்லாம் நிலைத்திருப்பாய் என்னும் கருப் பொருளில் நடைபெற்றது. பண்டிதர் கடம்பேஸ்வரனின் துணையாளர்களாக ஊடகவியலாளர்கள் பிரிந்தாபன் பொன்ராசா மற்றும் ஜெயம் ஜெகன் ஆகியோர் செயற் பட்டனர்.



நினைவுரையை செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள் நிகழ்த்தினார். அவர் தனது உரையில் ஊடகத்துறையின் மிகப்பெரிய மலை ஒன்று சரிந்து விட்டது. துணிச்சல் மிக்க பேராழுமை ஒன்று தூரப் போய் விட்டது. சிரித்துப் பழகும் பறவையொன்று சிறகொடிந்து போனது. ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறையில் கானமயில்நாதன் ஒரு பெரிய மைல்கல். போர்க்காலத்தில் ஊடகம் அடக்கு முறைகளால் தாக்கப்பட்ட வேளைகளில் தற்துணிவுடன் உதயன் பத்திரிகையைக் கொண்டு நடத்தியவர். ஆசிரியர் தலையங்கத்தின் மூலம் சர்வதேசத்தின் தமிழ்க்குரலாக ஒலித்த சமாதானப் புறா. தமிழ் மக்கள் இதயங்களில் பதிந்துவிட்ட இவர் சக ஊடகவியலாளர்களோடு அன்பாகப் பழகிய பண்பாளன். எத்தனையோ ஊடகவியலாளர்களை வளர்த்து விட்ட மகான்.

மனித செயற்பாடுகளில் அதிக ஈடுபாட்டைக் காட்டி வந்தவர். வட்டுக்கோட்டை சிந்துபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிந்துபுரம் காந்தி சனசமூக நிலையத்திற்காகக் காணியைப் பெற்றுக் கொள்ளுவதில் முன்னின்று உழைத்தவர். நிகழ்காலத் தகவல்களைத் தந்து எதிர்கால வரலாற்றை எழுதிக் கொண்டவர். தனது வாழ்நாள் முழுவதும் ஊடகத் துறைக்காய் அர்ப்பணம் செய்வர். உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியராக விளங்கிய கானமயில்நாதன் அவர்கள் உலகில் மறைந்தாலும் தனது எழுத்துக்களால் வாழ்ந்து கொண்டிருப்பார் என்றார்.

மேற்படி நிகழ்வில் யாழ் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் உயர் தரத்தில் ஊடகவியல் கற்கும் 40 மாணவர்களுக்கு கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் எழுதப்பட்ட ஊடகவியல் நூல்கள் பண்டிதர் கடம்பேஸ்வரனால் கொள்வனவு செய்யப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமய வெளியீடுகளைத் தாண்டி வெளிப்பத்திரிகைகளுக்கும் எழுத தூண்டியவர் கானமயில்நாதன் அவர்கள்





**திரு.ம.வ.கானமயில்நாதன் அவர்களுடன் ஏறக்குறைய 37 வருட உறவு**


கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையில் 1979ஆம் ஆண்டு முதல் எழுதி வந்தாலும் - பழம் பெரும் ஈழநாடு பத்திரிகையான ஈழநாட்டு பத்திரிகையில் தவக்ககாலச் சிந்தனை போன்ற சிறிய ஆக்கங்களை எழுதி வந்தாலும் - இன்று வெளிவரும் சிறிய அளவு ரப்லொயிட் அளவில் இல்லாமல் அகலத்தாளில் வெளிவந்த உதயன் பத்திரிகையில் முதற் கட்டுரை 16 மாாச் 1986 ஞாயிற்றுக்கிழமை அன்றும் நமது பாதை முன் கிறிஸ்துவின் கல்வாரிப்பாதை தெரியவேண்டும் எனும் தலைப்பிலும் இரண்டாம் கட்டுரை 23 மாாச் 1986 ஞாயிற்றுக்கிழமை அன்று கிறிஸ்துவினால் சிலுவை புனிதமடைகிறது என்ற தலைப்பிலும் பிரசுரமாக்கி கத்தோலிக்க சமய வெளியிடுகளைக் கடந்து வெளிப் பத்திரிகைகளுக்கும் பெரிய அளவில் எழுத என்னைத் தூண்டியவர் திரு ம.வ. கானமயில்நாதன் அவர்கள்.

29 டிசெம்பர் 2015 அன்று பிரதான வீதியில் அமைந்துள்ள கத்தோலிக்க அச்சகத்தின் பாதுகாவலன் மண்டபத்தில் அப்போதும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த திரு ம.வ. கானமயில்நாதன் அவர்களை அழைத்து யாழ்ப்பாண ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கையால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்தேன். அந்த அனுபவத்தைப் விரைவில் பகிர்வேன்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**



27 நவம்பர் 2013இல் பாரிசில் எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் வைபவத்தில் மறைந்த மூத்த ஊடகவியலாளர் கானமயில்நாதன் மற்றும் உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் ஆகியோர்.



மறைந்த மூத்த ஊடகவியலாளர் கானமயில்நாதன் குடும்பத்தினருக்கு எஸ்.பி.சாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்துறையில் பெண்களின் சாதனைகளும் சவால்களும்

மேலைத்தேச நாடுகள் போல் எமது நாடுகளில் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு இல்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். போர் முடிந்த பினனர் நிலை மாறலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் சமூக கட்டமைப்பு மற்றும் பல்வேறுபட்ட சமூகம் கலாசாரம் சார்ந்த அழுத்தங்கள் காரணமாக அதிக பெண்கள் ஊடகவியலில் தொடரந்தும் பணி புரிய முடியாத சூழல் காணப்படுகிறது . இருப்பினும் ஆங்காங்கு நம்பிக்கை தரும் வகையில் துறை சார்ந்த பெண்களையும் காண முடிகிறது. இவர்களுக்கும் களம் அமைப்பது எமது பணியே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் ஊடக விரிவுரையாளரும் சுயாதீன ஊடக மற்றும் பால்நிலை ஆலோசகருமாக அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிந்துவரும் கிருத்திகா தருமராஜா அவர்கள் ஊடகத் துறையில் பெண்களின் சாதனைகளும் சவால்களும் என்ற இந்தப் பகுதிக்குப் பொறுப்பாவார்.

இலங்கை உள்நாட்டு யுத்தத்தில் தனது இடது கண்ணை இழந்து 23 பெப்பிரவரி 2012இல் சிரியாவில் இறந்துபோன மேரி கொல்வின் பற்றி இங்கு ஆரம்பிக்கிறார்.


செய்தியாளர் ஊடக தூது மடல் ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் கிருத்திகா தர்மராஜா அவர்கள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

***(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)***

**2001ஆம் ஆண்டு வன்னியிலிருந்த ஐந்து இலட்சம் தமிழ் மக்களின் உண்மை நிலையினை அறிவதற்காக நான் அங்கு சென்றேன் - களம் 01**

மேரி கதரின் கொல்வின் அமெரிக்க நாட்டைச் சோந்தவர். இங்கிலாந்து நாட்டின் வுாந ளுரனெயல வுஅநள என்ற பத்திரிகையில் செய்தியாளராக 1985 இல் சேர்ந்த பின்னர் உலகின் பல போர்க் களங்களுக்குச் சென்று யுத்த செய்திகளை அறிக்கையிட்டுள்ளார்.

இலங்கை யுத்தத்தில் ஊடகவியலாளராக பணி புரிகையில் தனது இடது கண்ணை இழந்ததும் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சர்வதேச சாட்சியாளராகி ஈழத்தமிழர்களிற்காக குரல் கொடுத்து யுத்த நிறுத்த முயற்சிகளில் ஈடுபட்டமை போன்றன மேரி கொல்வினை நமக்கு நெருக்கமானவராக அடையாளப்படுத்துவதுக்கு பிரதான காரணமாகும். 23 பெப்பிரவரி 2012ஆம் ஆண்டு சிரிய யுத்தத்தில் அவர் இறந்து விட்டாலும் அவர் தமிழ் மக்களின் இதயங்களில் என்றும் நிலைத்திருக்க வேண்டிய ஒருவர். செய்தியாளர் மேரி கொல்வின் அவர்களின் வரலாற்றைப் பேசும் தனிப்பட்ட யுத்தம் என்ற பொருள்படும் "The private War" என்ற திரைப்படம் சில விமரிசனங்களைக் கொண்டிருப்பினும் ஈழத் தமிழர்களின் போர்க்கால உண்மையை




**அமரர் ஊடகவியலாளர் மேரி கொல்வின் அவர்களின் நினைவு தினம் ஒன்றில் அவர் ஈழத்தமிழ் மக்களுக்குக் கொடுத்த குரலுக்காகவும் ஆற்றிய பணிக்காகவும் அஞ்சலி செலுத்துகிறார் மூத்த புகைப்பட ஊடகவியலாளர் கதிர்வேலு அவர்கள்.**

உலகிற்கு வெளிக்காட்டியது என்பது உண்மையாகும்.

**இப்போது மேரிகொல்வின் பேசுகிறார்:**

*2001ஆம் ஆண்டு வன்னியிலிருந்த ஐந்து இலட்சம் தமிழ் மக்களின் அவல நிலையினை அறிவதற்காக நான் அங்கு சென்றேன். நான் அங்கு செல்வதற்கு இலங்கை அரசு உத்தியோகபூர்வ அனுமதி தர மறுத்ததால் சிறு விளக்குகளின் துணையுடன் அந்த ஒளியில் பல முட்கம்பி வேலிகளை கஸ்ரப்பட்டுத் தாண்டி இடுப்பளவு தண்ணீரில் காட்டுப் பாதையில் பயணம் செய்தேன்.*

*என்னை இனம் கண்டு கொண்ட இலங்கை இராணுவத்தினர் என்னை நோக்கிச் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். வெளிச்சக் குண்டுகளை வீசினர். நான் ஒரு பத்திரிகையாளர் என்று கத்தியும் அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. கிரனேட் எறிந்து என்னைத் தாக்கினார்கள்.*

*இரத்தக் காயத்துடன் முன்னே நடந்து வந்தேன். நிற்க முடியவில்லை. இரத்தம் வழிந்து கொண்டு இருந்தது. அக்காயங்களுடனேயே தாக்கிய இராணுவத்தினர் என்னை அவர்களின் கனரக வாகனம் ஒன்றிற்குள் தூக்கி எறிந்தார்கள்.*

**(தொடரும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அன்ரன் சின்னராசா பிலிப் என்ற இந்த சின்ன இராசாவை

# அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் இது ஒரு தேவையான பதிவு



சின்னா - சின்னா எனப் பலராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஒரு கத்தோலிக்க மதகுரு அன்ரன் சின்னராசா பிலிப் அடிகளார்.

இவர் 1991ஆம் ஆண்டு நீர்வேலி வங்கிக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைப்படுகொலைகளில் உயிர் தப்பியவர்.

மட்டக்களப்பு சிறை உடைப்பில் சிறையில் இருந்து வெளியேறி புலம் பெயர்ந்து திருமண பந்தத்தில் இணைந்து திருவாளர் அன்ரன் சின்னராசா பிலிப் ஆக மாற்றம் பெற்ற ஒரு தமிழர் விடுதலைச் செயற்பாட்டாளர்.

இவர் தான் ஆற்றிய எண்ணற்ற தன்னார்வப் பணிகளுக்காகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் மிகவும் மதிக்கப்பட்டவர்.

கனடா நாட்டில் ரொறென்ரோ மாநகரில் 26 பெப்பிரவரி 2023 அன்று இறந்து போன இவரின் கதை இது. (1952 - 2023)

அன்ரன் சின்னராசா பிலிப் அவர்களின் வாழ்வும் பணியும்

1952ஆம் ஆண்டு கரவெட்டி மண்ணில் பிறந்து குருத்துவக் கல்வியை இந்தியாவிலும் கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியிலும் கற்று குருப்பட்டம் பெற்று 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் உதவிப்பங்குத் தந்தையாகவும் பின்னர் நெடுந்தீவில் பங்குத்தந்தையாகவும் பணியாற்றியவர்.

தன் ஆரம்ப குருத்துவ நாட்களில் இளங்கோ என்ற பெயரில் ஈழநாடு பத்திரிகையில் அரசியற் கட்டுரைகளை எழுதியவர். இளம் என்றால் சின்ன என்று அர்த்தம். கோ என்றால் இராசா என்று அர்த்தம். இளங்கோ என்றால் சின்னராசா என்று அர்த்தம்.

கனடாவிற்குப் புலம் பெயர்ந்த பின்னர் கனகத்து தன் என்ற காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியப் பணி முதல் அனைத்துப் பணிகளையும் ஆற்றி அதனை கனடா ரொறன்ரோவில் இருந்து வெளியிட்டு உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பியவர்.

நீர்வேலி வங்கி கொள்ளை தொடர்பாகத் தகவல் தரத் தவறினார் அன்ரன் சின்னராசா பிலிப் அவர்கள்

25 மார்ச் 1981அன்று நீர்வேலி வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் தொடர்பாகத் தகவல் தெரிந்தும் தரத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுவிசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே 1983 ஆம் ஆண்டு கறுப்பு யூலை மாத வெலிக்கடைச் சிறைத் தாக்குதல் நடைபெற்றது.

கத்தோலிக்க மதகுருக்களான ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி. அடிகளார் - அன்ரன் சின்னராசா பிலிப் அடிகளார் வணக்கத்திற்குரிய போதகர் ஜெயகுலராஜா - டாக்டர் ஜெயதிலகராஜா - விரிவுரையாளர் நித்தியானந்தன் - காந்தீய தலைவர் எஸ்.ஏ. டேவிட் - காந்தீய அமைப்புச் செயலாளர் டாக்டர் ராஜசுந்தரம் - சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் - தமிழீழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் தர்மலிங்கம் ஆகியோர் என 28 தமிழ் கைதிகள் இருந்தனர்.

27.7.1983 அன்று மாலை 4.00 மணிக்கும் 4.30 மணிக்கும் இடைப்பட்ட நேரம். சப்பல் பகுதியில் ஏ-3 விசேட பிரிவில் இருந்த சிங்கள விசாரணைக் கைதிகளும் தண்டிக்கப்பட்ட கைதிகளும் கத்தி, கோடாரி, பொல்லு, விறகு கட்டை, கம்பி, குத்தூசி போன்ற ஆயுதங்களுடன் பெரும் கூச்சல் போட்டுக் கொண்டு கொலை வெறியுடன் கட்டடத்தை நோக்கி ஓடிவந்தார்கள்.


மத குருமார்களுக்குப் பூசை செய்ய மேசை ஒன்று கொடுக்கப்பட்டு இருந்தது. மேல் மாடிக்குச் சுமார் 50 சிங்களக் கைதிகள் வருவதைக் கண்டதும் அவர்கள் மேசைக் கால்களை உடைத்துக் கையிலெடுத்துக் கொண்டனர்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா ஒன்ராறியோ அரசின் ஜூன் கோல்வூட் ஞாபகார்த்த முதன்மைச் சாதனையாளர் விருது பெற்ற முதல் ஆசிய பிரதேசத்தவர் முதல் தமிழர் சின்னத்துரை திருச்செல்வம்



சின்னத்துரை திருச்செல்வம்



திருச்செல்வம் அகிலன்

*1989ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணி இருக்கும்.*

அது ஒரு அழகிய நிலாக் காலம் கனவினில் தினம் தினம் உலாப் போகும் என்று பாடக்கூடிய காலம் அல்ல அந்தக் காலம்.

சத்தம் இன்றிக் காதும் காதும் வைத்தாற்போல் இரகசியமாக விடயங்களைப் பேசிக் கொண்டும் ஏதும் அறியாதவர்போல் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டும் மக்கள் திரிந்த காலம். யாழ்ப்பாணம் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வில் உறைந்து போய் இருந்த காலம்.

நீல நிற போட் கார் - நாலு இளைஞர்கள் - ஒருவர் கையில் துப்பாக்கி - கதவு தட்டப்படுகிறது - வீட்டுக்காரருக்கு விடயம் புரிகிறது - விடயம் தலைக்கேறி விட்டது என்று - துவக்கோடு விவாதம் செய்ய வழியில்லை - பின்கதவு வழிதான் ஒரேவழி. தகப்பனாருக்கு வேறு வழியில்லை.

19ஆவது கீ பேத்டே - கொண்டாடி 05 நாள். எஸ். திருச்செல்வம் அகிலன் - சத்தம் கேட்டு வெளியே வந்த போது பலவந்தமாக தூக்கி காருக்குள் திணிக்கப்படுகிறார். சில நிமிடங்கள் மட்டுந்தான். தலையில் குண்டு துளைத்த அகிலனின் சடலம் வீதியிலே.

துப்பாக்கி ஒருநாள் தன்னை தேடி வரும் என்று தெரியும். ஆனால் இப்படி மாறிவரும் என்று தெரியாது.

அமெரிக்க பிரபல சிறுகதை எழுத்தாளர் ஒருவர் எழுதியுள்ள ஒரு சிறுகதையில் ஒரு தகப்பனின் 19 வயதுடைய மகனை சிறையில் அடைக்கி றார்கள். 50 வயதுடைய அந்த மகனின் தகப்பனார் தனது மகன் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக - அங்கும் இங்கும் ஓடித் திரிந்து - ஒழுங்கற்ற விதமான வீரதீரச் செயல்கள் செய்து - ஏனோதானோ என்ற வாழ்கையை வாழ்ந்து வந்தார். வியப்பும் அதிர்ச்சியும் அடைந்த பலர் அவர் ஏன் அப்படி வாழ்கிறார்? என்று கேட்டபோது அந்தத் தகப்பனார் நான் என் வாழ்க்கையை வாழவில்லை. எனக்காக வாழவில்லை. சிறையில் வாடும் என் மகனுக்காக அவன் வாழ்க்கையை அவனுக்காக வாழ்கிறேன் என்றாராம்.

இதே கதைதான் எஸ்.திருச்செல்வம் தம்பதிகள் வாழ்விலும் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் திண்ணைவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். திருச்செல்வம் அவர்கள் ஒரு சிறந்த ஊடகவியலாளர் - அரசியல் ஆய்வாளர்

- இலக்கிய விமர்சகர் - தேசிய செயற்பாட்டாளர் என் பன்முக ஆளுமை கொண்டவர்.

ஈழநாடு - தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பத்திரிகையாளராக தன் பணியை ஆரம்பித்த எஸ். திருச்செல்வம் அவர்கள் இந்திய அமைதி காக்கும் படை யாழ்ப்பாணத்திற்கு வந்த காலப்பகுதியில் ஈழமுரசு மற்றும் முரசொலி ஆகிய ஆகிய பத்திரிகைகளின் ஸ்தாபன ஆசிரியராகவும் முரசொலியின் பிரதம ஆசிரியராகவும் பணி புரிந்தவர்.

தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் இவர் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் என்ற இதழின் முதன்மை ஆசிரியரும் ஆவார். 08 நவம்பர் 2019ஆம் ஆண்டு தனது பத்திரிகைப் பணியின் 50 ஆண்டுகளை நிறைவு செய்த இவர் கனடா ஒன்ராறியோ அரசின் ஜூன் கோல்வூட் ஞாபகார்த்த முதன்மைச் சாதனையாளர் விருதை 2012ஆம் ஆண்டு பெற்ற முதல் ஆசிய பிரதேசத்தவர். முதல் தமிழர்.

யாழ்ப்பாணத்தில் 80பதுகளில் வெளிவந்த பிரபல தினப்பத்திரிகையான முரசொலியின் பிரதம ஆசிரியாக எஸ். திருச்செல்வம் அவர்கள் பணியாற்றிய போது அவரைக் கொல்வதற்கு பல முயற்சிகள் நடந்திருந்தன. அதற்கு முன்னர் அவரது பத்திரிகை அலுவலகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. அவர் உயிர் தப்பினார். 82 நாட்கள் அவரைச் சிறையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தார்கள். கடைசியாக அவரின் மகனின் கொலை நடந்து முடிந்திருந்தது.

**தொடரும்...**


**செய்தியாளர் ஊடக செய்திமடல் வெளியீட்டின் போது மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் அவர்கள் கனடாவில் வசிக்கும் மூத்த ஊடகவியலாளர் எஸ்.திருச்செல்வம் அவர்கள் பற்றி ஆற்றிய உரையை எதிர்பாருங்கள்...**

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1984ஆம் ஆண்டு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகையாளன்




*1984*ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் அன்றைய ஒரே பத்திரிகையான ஈழநாடு பத்திரிகையின் வெள்ளி விழாக் காலத்தில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவராகதற்போதைய டான்தொலைக்காட்சி இயக்குநர் எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் பணியாற்றிய காலத்தில் பத்திரிகையாளன் என்ற இது போன்ற ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

86 பக்கங்களைக் கொண்ட மேற்படி பத்திரிகையாளன் என்ற சஞ்சிகையில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவரும் ஈழநாடு உதவி ஆசிரியருமான எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார். அன்றைய யாழ் மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம் அவர்கள் பத்திரிகையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்ற தலைப்பில் செய்தி தந்துள்ளார். பத்திரிகைத் தொழிலின் இலட்சியம் பொதுஜன ஊழியம் என்ற தலைப்பில் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் சபாரத்தினம் அவர்கள் செய்தி தந்துள்ளார்.

பத்திரிகையாளன் என்ற அவ்விதழ் பற்றிய மேலதீக தகவல்களை தொடர்ந்து இவ்விதழில் தருவோம்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**

பத்திரிகையாளன் என்ற தலைப்பில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்க வெளியீடாக பெப்பிரவரி *1984*இல் வெளியான சஞ்சிகையில் ஒரு பெரும் ஆரம்பம் என்ற தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கம்.

**ஒரு பெரும் ஆரம்பம்**

பத்திரிகைகளையும் பத்திரிகையாளர்களையும் மற்றோர் ராஜ ஜனனிகள் (king makers) என வர்ணிப்பார்கள். அது எந்த அளவிற்கு உண்மையோ இல்லையோ வாஸ்தலத்தில் பத்திரிகைகள் சக்தி மிக்கவை. பத்திரிகையாளர்கள் ஆற்றலுள்ளவர்கள்.

ஆனால் பத்திரிகைகள் எந்தளவு கஸ்ரங்கள் - (பொருளாதாரம் முதல் தணிக்கை வரை) மத்தியில் வெளிவருகின்றன. பத்திரிகையாளர்கள் எவ்வளவு இடர்பாடுகள் மத்தியில் செயல்படுகின்றனர் என்பதைப் பற்றி பலர் அறிய நியாயம் இல்லை. இவை தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்துவதற்குப் பத்திரிகையாளன் இச்சந்தர்ப்பத்தை தேர்ந்தெடுத்திருப்பதிலும் நியாயம் இல்லாமலில்லை.

பல்வேறு கஸ்ர நஸ்ரங்கள் மத்தியிலும் மட்டுப்பபடுத்தப்பட்ட நிதி மற்றும் வளங்களுடனும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எமது பிரதேசத்திலிருந்து வெளிவருகின்ற ஈழநாடு பத்திரிகை தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடும் தறுவாய் இது. பத்திரிகைகளும் பத்திரிகைத் தொழிலையே தமது ஜீவனோபாயமாக மட்டுமன்றி மன ஈடுபாடுள்ள சேவையாகவும் கொண்டுள்ள பத்திரிகைகளும் எதிர்நோக்கும் கஸ்ரங்களை அறியச் செய்வதற்கென நாம் துவக்கும் இச்செய்திக்கதிரின் முதலிதழை வெளியிடுவதற்கு இதைவிடப் பொருத்தமான சந்தர்ப்பம் இருக்க முடியாது.

ஈழநாடு தமிழ்த் தென்றலை வீசியுமுள்ளது. தளல் தீயைத் தாண்டியுமுள்ளது. அது இந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்ததே ஒரு தனித்துவமான சாதனை. இப்பிரதேச மக்களின் இதயநாடியாக உதயஜோதியாக இதுகாறும் திகழ்ந்து வந்த ஈழநாடு பல்லாண்டு நிலைத்து பயனார் பத்திரிகைப் பணியை ஆற்ற வேண்டுமென வாழ்த்துகிறோம். இதே வேளையில் ராஜ ஜனனிகள் என மற்றோரால் வர்ணிக்கப்பட்டாலும் இன்று யாசக விருத்திகளாக அவதியுறும் இப்பிரதேச பத்திரிகையாளர்களின் துயர் துடைக்க இச்சந்தர்ப்பத்தில் உறுதி பூணுவோம். பத்திரிகை யாளர்களின் வருங்காலத்தைப் பொறுத் தளவில் இது ஒரு பெரும் ஆரம்பமாக அமையட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்

கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் - என்ற இந்தப் பழமொழியின் கருத்து வரம்பு ஏதுமின்றி முடிந்த அனைத்தையும் கற்றுத் தேர்பவன் பண்டிதன் என்ற பெயரைப் பெறுவான் என்பதாகும்.

கட்டமைக்கப்பட்ட கல்வியை விட இன்று இணையத்தில் சமூக ஊடகங்கள் வழி கண்டதையும் கேட்டதையும் கற்று அறிவை வளர்ப்போர் அதிகம் என்ற எண்ணத்தில் செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்ற இந்தப் பகுதியை இணைக்கிறது.

செய்தியாளர் படிக்கவும் பதியவும் உதவும் நோக்குடன் ஊடகம் சார்ந்து கண்டதும் கேட்டதும் தெரிந்ததும் கற்றதும் இங்கு பகிரப்படும்.

நீங்களும் ஊடகம் சார்ந்து கண்டதையும் கேட்டதையும் இங்கு பகிரலாம்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**

**ஈழத்துப் பத்திரிகை உலகின் தனி நாயகம் எஸ்.டி.சிவநாயகம்**


**நன்றி 06 மார்ச் 2022தினகரன் வாரமஞ்சரி**

இலங்கைப் பத்திரிகையாசிரியர்களில் ஐம்பது ஆண்டுகால பத்திரிகைப் பணியில் தன்னிகரற்ற தனிநாயகமாகத்திகழ்ந்தவர் அமரர் எஸ்.டி.சிவநாயகம் ஆவார்.

ஆங்கிலப் பத்திரிகாசிரியராக ஐம்பது ஆண்டுகால



**எஸ்.டி.சிவநாயகம்**




**எஸ்.சிவநாயகம்**

வரலாற்றைக் கொண்டிருந்த எஸ்.சிவநாயகம் ளுயவரசனயல சுநஎநைற - Hotspring ஆகிய பத்திரிகைகளுக்கூடாகவும் The pen and the gun - Sri Lanka: Witness to History *(2005)* என்ற நூல்களுக்கூடாகவும் நன்கு அறியப்பட்டவரே. ஆயினும் சிவநாயகம் என்றதும் எஸ்.டி.சிவநாயகத்தையே பெரும்பாலானோர் நினைவில் கொண்டிருந்தனர்.

லண்டனில் மிகப்பல சந்தர்ப்பங்களில் இவர்கள் இருவரும் வெவ்வேறு பத்திராதிபர்கள் என்று நான் விளக்க நேர்ந்திருக்கிறது.

**மு.நித்தியானந்தன் - லண்டன்**

**மறைந்த மூத்த ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் புனை பெயர் - தராகி என்று அல்ல தாரகை என்றே வந்திருக்க வேண்டும்**




தர்மரத்தினம் சிவராம் அல்லது தராக்கி சிவராம் *(1959 - 2005)* என்பவர் தமிழ் ஊடகவியலாளரும் தமிழ் நெற் என்ற ஆங்கில இணையத்தளத்தின் பிரதான எழுத்தாளரும் முன்னாள் போராளியுமாவார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் காவல் நிலையம் முன்பாக வெள்ளை நிற வான் ஒன்றில் கடத்தப்பட்ட இவர் இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1998ஆம் ஆண்டு த ஐலண் என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அரசியல் ஆய்வாளர் ஒருவர் தேவைப்பட்டபோது றிச்சட் டீ சொய்சா சிவராமின் பெயரைச் சிபாரிசு செய்தார்.

த ஐலண் என்ற ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் காமினி வீரக்கோன் தாரகா என்ற நற்சேத்திரம் என்ற பொருள்படும் புனை பெயரை முன் மொழிந்தார். (தமிழிலும் தாரகை) ஆனால் தாரகை என்ற அந்தப் புனை பெயரை த ஐலண் என்ற ஆங்கிலப் பத்திரிகைத் துணை ஆசிரியர் தாரக்கி எனத் தவறுதலாக அச்சுச் செய்து விட்டார். தாரக்கி என்ற பெயரே பின்னர் பாவிக்கப்படுகிறது.

ஆதாரம் இதோ தரப்படுகிறது.

In 1988 with the encouragement of fellow journalist, activist and actor Richard De Zoysa he became a reporter for the UN-funded Inter Press Service (IPS) for whom De Zoysa was a correspondent. In 1989 when The Island newspaper needed a political analyst, De Zoysa suggested Sivaram. The Island editor, Gamini Weerakon, proposed tharaka or star in Sinhalese as Sivaram's pen name but a sub-editor accidentally printed Taraki instead, giving birth to Sivaram's pen name.

https://en.wikipedia.org/wiki/Taraki_Sivaram



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியல் கற்போம் - பொறுப்புடன் கடமையாற்றுவோம்

அது ஓர் அமைதியான மாலைப் பொழுது. நேரம் மாலை 05 மணி இருக்கும். உதயபுரக் கடற்கரையோரக் காற்று ஊ... ஊ... என்ற பயங்கர சத்தத்துடன் வேகமாக வீசி - உப்புக் கலந்த கடல் மணலை கண் மண் தெரியாமல் அள்ளிக் வீசி - எல்லா மரங்களை பேயாட்டம் ஆட்டி அசைத்து - இதோ பிடுங்கிப் போடுகிறேன் பார் என்று சத்தியம் செய்து கொண்டு இருந்தது.

பிசப்சவுந்தரம் மீடியா சென்ரர் - பிசப்ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் தொலைபேசி மணி என்றுமில்லாத உசாருடன் ஓய்யாரமாக கிறீங்... கிறீங்... என கடற்கரைக் காற்றையும் அலைகளின் ஓசையையும் போட்டி போட்டு மிஞ்சி ஒலித்துக் கொண்டிருந்தது.

நீண்ட நேரமாக ஒலிக்கவில்லையே - இப்ப என்ன நடந்தது. சரி எடுத்துத்தான் பார்ப்போமே என எடுத்த போது ஏ.எல். ஊடகப்பாட சோதனைக்கு 2023ஆம் ஆண்டு தோற்றுகிறேன். ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம் என்ற புத்தகத்தை உங்களிடம் படிக்க வாங்க முடியுமா - இது அந்தப் பக்கக் குரல்.

கதைத்த பின்னர் யாழ் நகரின் பிரபல பாடசாலை மாணவர் இருவர் வந்தனர். ஏ.எல். ஊடகப் பாடத்திற்கான ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம் என்ற ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் எழுதிய புத்தகம் இரண்டு பேருக்கும் இலவசமாகவே கொடுக்கப்பட்டது.

பரிட்சைக்கு முன்னர் இப்புத்தகத்தை முழுமையாகப் படிக்க முடியாது. சுருக்கமாக ஏதும் நோட்ஸ் கிடைக்குமா?.

சிறிய யூரியுப் வீடியோ என்றால் திறமாக இருக்கும். கஸ்ரமில்லாமல் வேகமாக வீடியோவைப் பார்த்து விட்டுப் பரிட்சை எழுதலாம்.

சுருக்கமான ஏதும் நோட்ஸ் கிடைக்குமா - குறிப்பாக சிறிய வீடியோ என்றால் திறமாக இருக்கும். கஸ்ரமில்லாமல் வேகமாகக் கேட்டு விட்டுப் பரிட்சை எழுதலாம். இதுவும் அந்தப் பக்க குரல்தான்.

அவர்கள் கேட்ட இந்த கேள்விதான் ஊடகவியல் கற்போம் என்ற இந்தப் பகுதி எழுத்திற்குக் களம் தந்தது. இதன் பயனான

(01) ஊடகவியல் பற்றிய பாடக் குறிப்புக்கள் இந்தப் பகுதியில் தரப்படும்.

(02) இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளம் என்ற பெருமையுடன் 26 நவம்பர் 2011 அன்று உருவாக்கப்பட்ட தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா - tcnl என்ற இணையத்தளத்தின் காணொளிகளை வெளியிட 18 செப்ரெம்பர் 2011ஆம் ஆண்டில் tcnl100 என்ற யூரியூப் தளம் அமைக்கப்பட்டது. யூன் 2023 முதல் இந்த யூரியூப் தளம் www.youtube.com/@tcnl100 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டது. இந்த முகவரியிலும் இந்த ஊடகவியல் பாடக் குறிப்புக்கள் கணொளிகளாகத் தரவேற்றம் செய்யப்படும்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**



சென்னை அணிக்கு எதிராக சிறப்பாக விளையாடிய சென்னையை சேர்ந்த சாய் சுதர்சன்; குஜராத் அணிக்கு எதிராக சிறப்பாக விளையாடிய குஜராத்தை சேர்ந்த ரவீந்திர ஜடேஜா

விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்கு சிறப்பிடம் கொடுப்பதன் மூலம் வாசகர் வட்டத்தை அதிகரிக்க முடியும்.

இரவு 12 மணியைத் தாண்டியும் நித்திரை வராமல் கண்களைக் கசக்கிக் கொண்டும் இனி மழை வரக் கூடாது என வேண்டிக் கொண்டும் அடுத்து என்ன நடக்குமோ என்ற பதட்டம் மிக்க ஏக்கத்துடனும் சி.எஸ்.கே. எப்படியும் வெல்ல வேண்டும் - தல தோணி சாதிக்க வேண்டும் என்ற பலத்த எதிர்பார்ப்புடனும் அண்மையில் நடந்த பரபரப்பூட்டிய கிறிக்கற் போட்டி 2023 ஐ.பி.எல். ரீ 20 கிரிக்கெட் போட்டியாகும்.

அகமதாபாத் 2023 ஐ.பி.எல். ரீ 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் - சி.எஸ். கே. - அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் கார்த்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணியை வீழ்த்தி 5ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்று ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை சாம்பியன் பட்டம் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் சாதனையை சமன் செய்தது.

வெற்றிக்கு 14 பந்துகளில் 23 ரன்கள் தேவையாக இருந்த நிலையில் களமிறங்கிய தோணி முதல் பந்திலேயே ஆட்டமிழந்த போது மயான அமைதி நிலவியது. மனித மனசுகள் மௌனித்துப் போயின. எதிர்பார்ப்புக்கள் தவிடு பொடியாகிப் போயின. இனி என்ன செய்வது நடப்பதைப் பாரப்போம் என மனித மனதுகள் சமாதானம் செய்தன.

கடைசி 2 பந்துகளில் 10 ரன்கள் தேவை என்ற நிலையில் 5ஆவது பந்தை ஜடேஜா சிக்ஸருக்கு பறக்கவிட ஆட்டத்தின் பரபரப்பு அதிகமானது. கடைசி பந்தை ஜடேஜா பைன் லெக் திசையில் பவுண்டரிக்கு விரட்ட சி.எஸ்.கே. அணி 15 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 171 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்கு சிறப்பிடம் கொடுப்பதன் மூலம் வாசகவ வட்டத்தை அதிகரிக்க முடியும்

விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்குச் சிறப்பிடம் கொடுப்பதன் மூலம் பத்திரிகையின் வாசகர் வட்டத்தை அதிகரிக்க முடியும் என்ற யுக்தியை தமிழ்ப் பத்திரிகைகள் போர் முடிந்த காலத்திலே உணரத் தொடங்கியுள்ளன.

இதனால் இன்று விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்கு தமிழ் பத்திரிகைகள் அனைத்தும் அதிக முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்கத் தொடங்கியுள்ளன. அதிலும் இறுதிப்பக்கத்தில் விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்கு இடம் தரும் ஆங்கிலப் பத்திரிகையியல் முறையை தமதாக்கிக் கொண்டுள்ளன.

இதனால் இன்று சர்வதேச - தேசிய விளையாட்டுச் செய்தி அறிக்கையிடல்கள் மட்டுமல்ல பிரதேச - உள்ளூர் விளையாட்டுச் செய்திகளும் அறிக்கையிடப்படுகின்றன.

இந்த யுக்திகளை பின்பற்றுவதன் மூலம் வாசகர் வட்டத்தை அதிகரிக்க முடியும் - விற்பனையில் உயவுச்சியை எதிர்பார்க்க முடியும் - வாசகர் மத்தியில் பிரபல்யம் பெற முடியும் - பத்திரிகைக்கு பெயரையும் அழகையும் கொடுக்க முடியும் என தமிழ் பத்திரிகைகள் நம்புகின்றன. உண்மையில் இது யாதாவுத்தமானதே.

இவ்வாக்கம் விளையாட்டுச் செய்தி அறிக்கையிடல் பற்றியும் அதன் செய்தியாளருக்கும் - விளையாட்டுச் செய்தி நடத்துனருக்கும் இருக்க வேண்டிய தகமைகைள் திறமைகள் பற்றியும் விரிவாக ஆய்வு செய்கிறது.

விளையாட்டுச் செய்தியை தொலைக்காட்சியில் காலம் தவறாது பார்ப்பவர்களும் - வானொலியில் நேரம் தவறாது கேட்பவர்களும் - பத்திரிகைகளில் கிரமமாகப் படிப்பவர்களுமே அதிக விளையாட்டுச் செய்தி பற்றிய பின்புல அறிவுள்ளவர்களாக கணிக்கப்படுகிறார்கள் அல்லது கருதப்படுகிறார்கள்.

விளையாட்டுச் செய்தி ஆர்வலர்கள் - எல்லா விளையாட்டுக்களைப் பற்றியும் அதன் பின்னணி பற்றியும் அதனோடு இணைந்த சட்டங்கள் மற்றும் நுணுக்கங்கள் பற்றியும் முழுமையாகவும் தெளிவாகவும் அறிந்து இருக்கிறார்கள்.

ஆனபடியால் விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலை மேற்கொள்ளும் செய்தியாளர் தம்மைப் போன்றோ அல்லது தம்மைவிட பல மடங்கு அதிகமாகவோ விளையாட்டுச் செய்திகளையும் அதன் பின்புலங்களையும் அதன் நுட்ப நுணுக்கங்களையும் பற்றி அறிந்திருக்க வேண்டும் என விளையாட்டு ஆர்வலர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பத்திரிகையியலின் எல்லா அறிக்கையிடல்களையும் எல்லா செய்தியாளர்களும் அறிக்கையிட முடியாது என்பது இங்கு அறியப்பட வேண்டிய விடயமாகும். விளையாட்டு செய்தி அறிக்கையிடல் போன்ற விசேட செய்தி அறிக்கையிடல்களுக்கு செய்தியாளர் விசேட தகமை பெற்றிருக்க வேண்டும்.

விளையாட்டு ஆர்வலர்கள் என்று இங்கே குறிப்பிடும் போது விளையாட்டுச் செய்திகளை பத்திரிகைகளில் வாசிப்பவர்களையும் - வானொலியில் கேட்பவர்களையும் - தொலைக்காட்சிகளில் பார்ப் பவர்களையும் நாம் இங்கு கருதுவோம்.

செய்தித் துறையில் துல்லியம் - நடுநிலைமை - பக்கம் சாராமை என்பன தாரக மந்திரங்களாக கணிக்கப்படுகின்ற போதும் கவனிக்கப்படுகின்ற போதும் விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்கும் அது மிகவும் பொருந்துவதாகவே இருக்கிறது.

**1. விளையாட்டுச் செய்தி ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு என்ன?**

விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலைப் படிப்போரும் - கேட்போரும் - பார்ப்போரும் அங்கு துல்லியமான பக்கம் சாராத அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

விளையாட்டுச் செய்தி அறிக்கையிடல் உரிய விதமாக தேவையான உணர்வூட்டல்களோடு பக்கம் சாராமல் விடயங்களை அறிக்கையிட வேண்டும் என எதிர்பார்க்கிறாாகள். எதை எவ்வாறு எப்படி அறிக்கையிட வேண்டும் என்பது பற்றிய சரியான தெளிவோடு தீர்மானங்கள் செய்தியாளரால் எடுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

விளையாட்டுச் செய்தியாளர்களுக்கு ஒரு நிகழ்வை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது பாராட்ட வேண்டும் - ஒரு சம்பவத்தை எப்போது விமர்சனம் செய்ய வேண்டும் - ஒரு முடிவுக்கு எப்போது ஆதரவு வழங்க வேண்டும் - அல்லது எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் - அல்லது ஒரு மாற்றத்திற்கு எப்போது அழைப்பு விட வேண்டும் என்பது பற்றிய தெளிவான அறிவு இருக்க வேண்டும் என்றே விளையாட்டு ஆர்வலர்கள் விரும்புகிறார்கள்.

உதாரணமாக: யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் 2013 இல் நடைபெற்ற பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் பாடசாலைகளுக்கடையிலான சினேக பூர்வ வருடாந்த கிரிக்கெட் போட்டியின் போது அமலன் என அழைக்கப்படுகின்ற யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவன் கொலை செய்யப்பட்ட நிகழ்வு பலரின் கவனத்தையும் வியப்பையும் ஈர்த்த ஒரு நிகழ்வாகும்.

இந்த நிகழ்வால் கத்தோலிக்க கல்லூரியான யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் - கிறிஸ்தவ கல்லூரியான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த போட்டிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமை இங்கு கவலையோடு பதியப்பட வேண்டிய விடயமாகும்.

இது போன்ற பாடசாலைகளுக்கடையிலான சினேக பூர்வ வருடாந்த கிரிக்கெட் போட்டிகளின் முன்னோடி கல்லூரிகள் கத்தோலிக்க கல்லூரியான யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியும் கிறிஸ்தவ கல்லூரியான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கோண செய்திக் கோணங்களை தன்னகத்தே அமைத்த அதேவேளை பிரச்சினைக்குரிய கொலையில் முடிந்த இந்த விளையாட்டு செய்தி அறிக்கையிடல் கவனத்தோடு அறிக்கையிடப்பட வேண்டிய ஒன்றாக மாறியது.

இரு கல்லூரிகள் - அவை கத்தோலிக்க கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்தவை - அவற்றின் தொடரப்பட வேண்டிய நீண்ட கால பாரம்பரியம் - வரப்போகும் எதிர்காலம் - இரு கல்லூரி மரணவர்கள் - பழைய மாணவர்கள் - இறந்தவரின் குடும்பம் - அதில் சம்மந்தப்பட்டவர்கள் - இந்த இரு தரப்பினரின் எதிர்காலம் - அதிலும் நீதி மன்றம் வரை சென்ற ஒரு விடயம் என பல விடயங்கள் கவனிக்கப்பட்டு பல்கோணத்தில் அணுகப்பட்டு நுட்பத்தோடும் நுணுக்கத்தோடும் அறிக்கையிட வேண்டிய தேவை கொண்ட ஒன்றாக இந்த விளையாட்டு செய்தி அறிக்கையிடல் மாறியது.

இங்கு தெளிவாக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் விளையாட்டு செய்தி அறிக்கையிடல் எல்லா செய்தியாளராலும் அறிக்கையிடப்படக்கூடிய ஒரு செய்தியறிவிப்பல்ல என்பதாகும்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டியது மேலதீக விடயம் என்னவென்றால் செய்தியாளர்கள் செய்திகளை அறிக்கையிடுவதோடு தம் பணியை நிறுத்திக் கொள்ள வேண்டும். அக்குறிப்பட்ட செய்தி பற்றி விமர்சிக்கவோ குறிப்புச் சொல்லவோ கூடாது என்ற செய்தித் துறையின் நியதி இங்கு சற்று விடப்படுகிறது என்பதாகும்.

அதாவது விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலில் அறிக்கையிடுபவர் விளையாட்டு நடைபெற்ற விதத்தையும் விளையாட்டின் போது எடுக்கப்பட்ட முடிவுகளின் தன்மையையும் விளையாட்டு வீரர்களும் பார்வையாளர்களும் நடந்து கொண்ட விதத்தையும் அப்படியே அறிக்கையிடுவதோடு அவற்றுக்கு மேலதிகமாக குறிப்புக்கள் கருத்துக்கள் விமர்சனங்கள் என்பவற்றை தெரிவிக்க வேண்டிய தேவை உருவாகிறது என்பதாகும்.

விளையாட்டு ஆவலர்கள் ஒரு குறிப்பிட்ட விளையாட்டைத் தாம் விளையாடவும் அவ் விளையாட்டை மற்றவர்கள் விளையாடும் போது பாடித்து இரசிக்கவும் விரும்புகிறார்கள். மேலும் அவ்விளையாட்டில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றி விவாதிக்கவும் கலந்துரையாடவும் எதிர்காலத் திட்டங்கள் பற்றி பேசவும் விரும்புகிறார்கள்.

நடுவர்களால் எடுக்கப்பட்ட முடிவுகள் - பயிற்றுனர்களால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் - தலைவரினால் தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் பற்றிப் பேசவும் - தமது எண்ணங்களையும் தீர்மானங்களையும் வெளியிடவும் விரும்புகிறார்கள்.

விளையாட்டு வாசகர்களை அர்ப்பணம் மிக்க வாசகர்கள் என்றே கருத வேண்டும். அவர்கள் எப்போதும் விளையாட்டுச் செய்திகள் பற்றி முழுமையாகவும் முடிவாகவும் அறிய வேண்டும் என்றே விரும்புகிறார்கள். புதிய விதிகள் - புதிய மாற்றங்கள் - புதிய அறிமுகப்படுத்தல்கள் பற்றி தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

விளையாட்டு வீரர்களையும் அவர்களின் பலங்கள் - பலவீனங்கள் - பின்னணிகள் பழைய சாதனைகள் - திறமைகள் - தகைமைகள் என்பன பற்றியெல்லாம்

முழுமையாக பார்க்கவும் - படிக்கவும் - அறியவும் - கலந்துரையாடவும் விரும்புகிறார்கள். எந்த விளையாட்டு எங்கு நடைபெற்றாலும் அதனைச் சென்று நேரடியாகப் பார்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

அதனைப் பார்த்த பின்னவுகூட அவ் விளையாட்டுச் செய்தி பற்றிய அறிக்கையிடல் வெளியாகும் போது அதனைத் திரும்பவும் பத்திரிகையில் படிக்கவோ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் கேட்கவோ - தொலைக்காட்சிகளில் வெளியிடப்படும் விசேட காட்சித் தொகுப்புக்களில் பாடக்கவோ விரும்புகிறார்கள். எனவே விளையாட்டு வாசகடகளை அர்ப்பணம் மிக்க வாசகர்கள் என்றே கருத வேண்டும். பத்திரிகைகளில் முன் பின் பக்கங்களே முக்கிய பக்கங்கள் ஆகின்றன. ஆங்கிலப் பத்திரிகைகளில் விளையாட்டுச் செய்தி அறிக்கையிடல்கள் இறுதிப் பக்கங்களிலேயே வெளியிடப்படுகின்றன. கடைகளிலே பத்திரிகைகள் தொங்க விடப்படும் போது முன் பின் பக்கங்கள் தெரியும் விதமாகவே தொங்கவிடப்படுகின்றன. இவற்றைப் பார்த்து பத்திரிகையை வாங்க வாசகர்கள் தூண்டப்ப டுகின்றனர்.

விளையாட்டுச் செய்திகளை குறிப்பாக படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் பத்திரிகைகளை வாங்குவோரும் இருக்கிறார்கள் என்ற நுட்பத்தை அறிந்தமையினாலேயே பத்திரிகைகள் குறிப்பாக ஆங்கிலப் பத்திரிகைகள் விளையாட்டுச் செய்திகளை இறுதிப் பக்கங்களில் வெளியிடுகின்ற யுக்தியை கடைப்பிடிக்கின்றன.

யுத்த முடிவுக்குப் பின்னரேயே தமிழ்ப் பத்திரிகைகள் குறிப்பான விதமாக விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்கு முக்கிய இடம் தரும் தன்மையை காணக் கூடியதாக இருக்கிறது என்று முன்பு கூறிய விடயத்தை திரும்ப இங்கு கூறுவது பொருத்தமானது.

இவ்வாறு விளையாட்டுச் செய்திகளுக்கு முக்கிய இடம் தந்து வெளியிடத் தொடங்கிய போது சில தமிழ்ப் பத்திரிகைகள் இறுதிப் பக்கத்தில் விளையாட்டுச் செய்தி அறிக்கையிடலுக்காக இடம் ஒதுக்குகின்ற தன்மையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இருந்த போதும் சில தமிழ்ப் பத்திரிகைகள் செய்தித் தொடர்ச்சிகள் - முக்கிய விளம்பரங்கள் - பிந்திய செய்திகள் - கடைசி நேர மரண அறிவித்தல்கள் போன்ற பல காரணங்களை முன்வைத்து விளையாட்டுச் செய்திகளை இறுதிப் பக்கத்தில் எல்லாக் காலங்களிலும் வெளியிடுவதில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

உலகின் எல்லா மக்கள் மத்தியிலும் அவர்கள் எந்த இனத்தை - எந்த இடத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் விளையாட்டு ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. உடல் வளர்ச்சியையும் உடற் பயிற்சியையும் கருத்திற் கொண்டும் மனதையும் உடலையும் சுறுசுறுப்பாக வைத்திருப்பதை கவனத்திற் கொண்டும் அநேகர் விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டவே செய்கின்றனர்.

வார் - கிட்டிப்புள்ளு - கிளித்தட்டு - கள்ளன் பொலிஸ் - கபடி - எல்லே போன்ற உள்ளூட விளையாட்டுக்களும் - மேலைத்தேய நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட துடுப்பாட்டம் - உதைபந்தாட்டம் - கரப்பந்தாட்டம் - கூடைப் பந்தாட்டம் - வலைப்பந்தாட்டம் - ரெனிஸ் - கொக்கி - மேசைப்பந்தாட்டம் போன்ற பல விளையாட்டுக்களும் இருந்தாலும் உள்ளூர் விளையாட்டுக்களை விட மேலைத்தேய விளையாட்டுக்களே பிரபல்யமான விளையாட் டுக்களாக இருக்கின்றன.

அதேவேளை எமது பிரதேசங்களில் அதிக பிரபல்யம் அடையாத கொல்ப் - குதிரைப் பந்தயம் போன்ற விளையாட்டுக்கள் இருக்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்படலாம்.

**(தொடரும்)**

# ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து பணியாற்ற இது போன்ற இதழ்கள் துணைபுரிய முடியுமென நம்புகிறேன்

**சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - நல்லை ஆதீனம்**



தமிழ் ஊடகத்துறையில் பன்முக பங்களிப்புக்களைச் செய்து தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கும் யாழ்ப்பாணக் குருவான ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் முயற்சியில் செய்தியாளர் என்ற சஞ்சிகை ஒன்று வெளிவர இருப்பது பற்றி அறிந்து மனம் மகிழ்கிறேன்.

இன்று அனைத்துத் துறை களையும் உள்வாங்கி அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது ஊடகத்துறையாகும். அதனை இயக்கும் கருவிகளாக இருக்கும் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து பணியாற்ற அவர்களுக்கிடையில் அன்புப் பாலத்தை அமைக்க இது போன்ற இதழ்கள் துணைபுரிய முடியுமென நம்புகிறேன்.

பல ஊடக நூல்களை எழுதியும் பல்கலைக் கழகங்களில் ஊடகக் கல்வியை போதித்தும் பயிற்சிப் வகுப்புக்களை நடத்தியும் சிறப்பான ஊடகப் பணியாற்றி வரும் இவரின் இந்த ஊடக தூதுமடல்ப் பணியும் சிறக்க வேண்டுமென மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெறுமையானது உங்கள் இடங்கள் மட்டுமல்ல எங்கள் மனதுகளும்தான்

## பேனாவின் குரல் ஒன்று ஓய்ந்து விட்டது - ஓய்வெடுக்க நீண்ட தூரம் சென்று விட்டது

ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் 12 ஏப்பிறல் 2023 அன்று அதிகாலை தமது 76 ஆவது வயதில் காலமானார்.

1980களில் வீரகேசரியின் வவுனியா நிருபராக இணைந்து கொண்ட இவர் இடர்படும் மக்களின் குரலாக நீண்ட காலம் ஓங்கி ஒலித்தார்.

வீரகேசரியின் ஆசிரியர்களான டேவிட் ராஜ் மற்றும் இராஜகோபால் போன்றோரின் கைகளில் இவரின் ஆரம்பகாலம் எழுத்துக்கள் செம்மைப்படுத்தப் பட்டுள்ளதாக அறிய வருகிறது. பி.பி.சி, ரொயிறேஸ் செய்தி நிறுவனங்களுக்கு இலங்கை நாட்டுப் பிரதிநிதியாக இருந்து செய்திகளை வழங்கியுள்ளார். ஈழநாடு, தி ஐலண்ட் ஆகிய ஊடகங்களின் செய்தியாளராக பணியாற்றியதுடன் இறுதி வரை வீரகேசரி ஊடகவியலாளராகப் பணியாற்றியிருந்தார்.

வீரகேசரியின் எழுத்துப் பிளம்பாய் பி.பி.சி மற்றும் ரொயிற்றேஸ் செய்தி நிறுவனங்களின் கணீர் என்ற குரலாய் வவுனியா மண்ணின் அடையாள மனிதனாய் ஊடகவியலாளர் என்ற துணிவோடு மிக நீண்ட காலம் உயரச் சிறகடித்துப் பறந்தவர் ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்க வாசகம் அவர்கள்.

மூன்று தசாப்த காலப் போரின் போது பல்வேறு நெருக்கடிகள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மக்களின் அவலங்களையும் துன்ப துயரங்களையும் அநீதிகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டி உலகறியச் செய்தவர். யுத்த காலங்களில் பி.பி.சி தமிழோசைக்காக அவர் வழங்கிய செய்திகள் தமிழ் மக்கள் மத்தியில் இவருடைய ஆளுமையை உயர்த்தி இருந்தது. தன் நீண்ட கால ஊடகப் பயணத்தில் வெட்டு ஒண்டு துண்டு இரண்டாய் விடயங்களை பிட்டு பிட்டு வைத்தவர். ஊடக சட்டங்களையும் தர்மங்களையும் சரி வரப் பேணியவர்.

இவர் (01) கால அதிர்வுகள் (02) வாழத்துடிக்கும் வன்னி (03) மாற்றத்தை நாடும் மற்றுத் திறனாளிகள் என்ற மூன்று நூல்களையும் படைத்துள்ளார். நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் என்ற நூல் வெளி வராத நிலையில் உள்ளது என அறியவருகிறது. கலாபூசண விருது - ஊடகத்துறை வாழ்நாள் சாதனையாளர் விருது போன்ற பல விருதுகளையும் பல பாராட்டுக்க ளையும் தனதாக்கிக் கொண்டவர் இவர்.

2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் அதனுடன் இணைந்த தொழிற்சங்கங்கள், இலங்கை பத்திரிகை சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கையின் ஆசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் நிகழ்வில் பொன்னையா மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றிருந்தார்.

2022ஆம் ஆண்டு யாழ்.'வெண்மேரி' அறக்கட்டளை விருதுகள் வழங்கப்பட்டபோது மூத்த ஊடகவி யலாளர் பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனை யாளர் விருதைப் பெற்றிருந்தார்.

அமைதியாகச் சத்தமின்றி பேசி - அன்பால் அனைவரையும் ஆட்கொண்டு - ஆர்ப்பாட்டம் இன்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றி - யார் மனதையும் நோகப் பண்ணாமல் - அனைவரையும் அன்புடன் அரவணைத்து - மனச்சான்றின்படி வாழ்ந்து - ஊடக சாதனைப் படிகளில் ஏறிச் சரித்திரம் படைத்தது நிற்பதுதான் இவரின் சாதனை. பல ஆயிரக் கணக்கான செய்திகளையும் பல நூற்றுக்கணக்கான செய்திக் கட்டுரைகளையும் சில நூற்று சித்திரிப்பு எழுத்துக்களையும் பகுதி எழுத்துக்களையும் படைத்த இந்த மாணிக்க வாசகம் இனி மாணிக்க வாசம் வீசப் போவதில்லை என்பதே உண்மையாகும்.

இவர் இறைவனின் இன்ப சன்னிதானத்தில் அமைதியில் இளைப்பாற வரம் வேண்டி இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் அனைவருக்கும் ஊடக தூதுமடல் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து மலர் தூவி அஞ்சலித்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மண்ணின் சாதனை மைந்தன்

## அன்ரனி யேசுரட்ணம் சிறி




அன்ரனி யேசுரட்ணம் சிறி முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மண்ணின் மைந்தன். இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக்கற்கைகள் துறை மாணவனாகி (2014 - ஏ - 136) கலைப்பீட மட்டத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மட்டத்திலும் சிறந்து விளங்கி 2017ஆம் ஆண்டிற்கான பேராசிரியர் அழகையா துரைராஜா தங்கப்பதக்கங்கள் இரண்டை தனதாக்கி சாதனை புரிந்துள்ளார். செய்தியாளர் ஊடக தூது மடல் சாதனை மைந்தன் அன்ரனி யேசுரட்ணம் சிறி அவர்களை வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறது. அவரின் அனுபவப் பகிர்வு விரைவில் பகிரப்படும்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**

# மரணத்தின் பாதையை நான் அறிவேன் - 01



தமிழ் செய்தியாளர்கள் அனைவரும் படிக்க வேண்டிய ஓர் ஆசிரியர் தலையங்கம் சண்டே லீடர் ஆங்கில பத்திரிகை ஆசிரியர் சிங்கள இனத்தைச் சேர்ந்த லசந்த விக்கிரமதுங்க எழுதிய ஆசிரியர் தலையங்கம். 11 ஜனவரி 2009ஆம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகையில் வெளிவரவேண்டிய ஆசிரியர் தலையங்கத்தை 07 ஜனவரி அன்றே லசந்த விக்கிரமதுங்க எழுதி விட்டார்.

இதை எழுதிய அடுத்த நாளே அவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது இறப்பின் பின்னரே மரணத்தின் பாதையை நான் அறிவேன் என்ற அந்த ஆசிரியர் தலையங்கம் வெளியானது. இது வழக்கறிஞர் சுந்தர் ராஜன் அவர்களின் மொழிப்பெயர்ப்பில் அடுத்த இதழில் இருந்து தொடர்ந்து வெளிவரும்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**


# 2023ஆம் ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி பத்திரிகையாளர் தினம்

2023ஆம் ஆண்டு எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் பாதுகாவலர் புனித பிரான்சீஸ் சலேசியாரின் விண்ணகப் பிறப்பின் 400 ஆவது ஆண்டு ஆகும். இதனையொட்டி 2022 - 2023ஆம் ஆண்டு புனித பிரான்சீஸ் சலேசியார் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. பிரான்ஸ் நாட்டில் தோரன்ஸ் என்னுமிடத்தில் 1567ஆம் ஆண்டு 13 பிள்ளைகளில் மூத்த மகனாக சலேசியார் பிறந்தார். 1593ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1602ஆம் ஆண்டு ஆயரானார். 1610ஆம் ஆண்டு புனித மரியாவின் மினவுதல் சபை என்ற துறவற சபையை நிறுவினார். 1622ஆம் ஆண்டு டிசெமபர் 28 அன்று இறந்தார்.



1665இல் திருத்தந்தை 07ஆம் அலெக்சான்டர் பிரான்சீஸ் சலேசியாருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். 1877இல் திருத்தந்தை 09ஆம் பத்திநாதர் திரு அவை பேரறிஞர் பட்டம் வழங்கினார். திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பிரான்சீஸ் சலேசியாரை பத்திரிகையாளருக்குப் பாதுகாவலராக நியமித்தார்.

**(செய்தியாளர் ஊடக தூது மடல் ஆசிரியர் குழு)**



**யூன் - செப்ரெம்பர் 2023**
**செய்தியாளர் ஊடகத் தூது மடல்**
**அரைநூற்றாண்டு கடந்தும் ஊடகப் பணியாற்றிக்கொண்டிருக்கும்**
**மூத்த சின்னத்துரை தில்லைநாதன்**
**அவர்களுக்கு அர்ப்பணிக்கப்படும்**

யூன் 2023 ஊடகதூது மடல் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் - பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர் 23 - 25 பெரிய தோட்டம் பீச் றோட் யாழ்ப்பாணம் இலங்கை என்னும் முகவரியில் உள்ள தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரீ.சி.என்.எல்) அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org